விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 10 வியாழக்கிழமை (23.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# போரின் பின் இலங்கையில் தொடரும் இனப்படுகொலை

## விசாரணை அறிக்கை ஜெனிவாவில் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை போருக்குப் பின்னரும் அங்கு தொடர்கின்றது. இறுதிப் போரில் இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகள் இருந்துள்ளன என இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஜெனிவாவில் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவ் அறிக்கை ஜெனிவாவில் நேற்று இடம்பெற்ற ஜேர்மன் தீர்ப்பாயத்தின் ஊடக மாநாட்டில் இலங்கையின் இனப்படுகொலைக்கான விசாரணை என்ற தொனிப்பொருளில இடம்பெற்ற கலந்துரையாடலில் வெளியிடப்பட்டது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாய பொதுச் செயலாளர் கியன்னி டோக்னொனி இந்த அறிக்கையை வெளியிட்டு பேசுகையில் இலங்கை இராணுவமும் காவல்துறையும் தமிழ் மகளை துன்புறுத்தி, பாலியல் வன்கொடுமைகள் செய்தன. பெண்களுக்கு கட்டாய கருத்தடை செய்யப்படுகிறது. இலங்கையில் போருக்குப் பிறகும் இனப்படுகொலை தொடர்கிறது. இறுதிக் கட்டப் போரின்போது ஜனவரி முதல் மே மாதம் வரை பல ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2009ஆம் ஆண்டில் இருந்து தமிழ்

19-ம் பக்கம் பார்க்க

## விரிவடைந்து செல்கிறது மன்னார் மனித புதைகுழி

### நேற்றும் 3 மனித எச்சங்கள் மீட்பு



(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனித புதைகுழி நேற்று புதன்கிழமை 11ஆவது தடவையாக மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்பட்ட போது மேலும் மூன்று மனித எச்சங்கள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை வரை குறித்த மனித புதைகுழியில் 43 மனித எச்சங்கள கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக 11 ஆவது தடவையாக மன்னார் நீதவான் மற்றும் அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண ஆகியோர் முன்னிலையில் மனித புதைகுழி தோண்டப்பட்டது.

19-ம் பக்கம் பார்க்க

## மேற்குலகம் இலங்கையில் தலையிட மகிந்த அரசே காரணம் - ஜே.வி.பி

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தை மீறியும் மக்களின் மனித உரிமைகளை மீறியும் நாட்டின் மீது மேற்குலக நாடுகள் தலையிட வழியை இனறைய அரசாங்கமே ஏற்படுத்தியதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கும், அரசாங்கத்திற்கும் எதிராக மககள் அணிதிரளை வேண டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திபபில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித

19-ம் பக்கம் பார்க்க

## தவறு செய்தால் தூக்கிவிட வேண்டும்

(கொழும்பு)

பிரதமராக இருந்தாலும் அவர் தவறு செய்தால் தூக்கிவிட வேண்டும் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


இலங்கைக்கு ஹெரோயின் போதைப் பொருள் கடத்தி வரப்படுவது கவலைக்குரிய விடயம். நான் ஹெரோயின் போதைப்பொருளை இதுவரை கண்டதில்லை.

எனது செயலாளர் ஒருவர் கடிதம் அனுப்பியதை சரியானது எனக் கூறமாட்டேன். எந்த அமைச்சரும் செயலாளர்களும் இப்படியான நூற்றுக் கணக்கான கடிதங்களை அனுப்புவது வழக்கம்.

செயலாளர் ஒருவர் வழங்கிய கடிதம் ஒன்றை பெரிதாக எடுத்துக்

19-ம் பக்கம் பார்க்க

## மாலைதீவு - இலங்கை ஜனாதிபதிகள் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தை ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் நடந்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இலங்கைக்கு உத்தியோகபூர்வ

20-ம் பக்கம் பார்க்க

## சர்வதேச சமூகத்திற்கு போர்க்குற்ற காணொளிகளை அரச ஊடகங்களே விற்றன-கிரி

(கொழும்பு)

அரச ஊடகங்களே இறுதிக்கட்டப் போர் தொடர்பான காணொளிகளையும் தகவல்களையும் சர்வதேச சமூகத்திற்கு விற்பனை செய்ததாக ஐக்கிய தேசியக கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர்மேலும் தெரிவிக்கையில், இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற பிரதே சத்தில் அரச ஊடகங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

போர் நடைபெற்ற பிரதேசத்தில் செய்திகளை சேகரித்த அரச ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் தாம் எடுத்த காணொளிகளை அரசாங்கத்திற்கு எதிராக பயன்படுத்த சர வதேச சமூகத்திற்கு விற்பனை செய்துள்ளனர்.

சில காணொளிகள் 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு

19-ம் பக்கம் பார்க்க

தமிழ் - முஸ்லிம் பிரிவை ஏற்படுத்த முயற்சி
செய்திகள் பக்கம் 03

மானிப்பாய் இந்து - பற்றிக்ஸ் இணைச்சம்பியன்
விளையாட்டு பக்கம் 18

சர்வதேசத்தை நம்பி எந்தப்பயனும் இல்லை
செய்திகள் பக்கம் 11

மத்திய அரசுடன் வடக்கு இணையட்டும்
செய்திகள் பக்கம் 10

ராஜீவ் கொலை குற்றவாளிகளுக்கு மரண தண்டனை இரத்தாகும்
செய்திகள் பக்கம் 13

ஓம் நமசிவாய என ஒலிக்கும் பிரார்த்தனை வேள்வியில் இணைவோம் வாரீர்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

## போர்க்குற்றம் சுமத்துவோரை குறுக்குவிசாரணை செய்ய வேண்டும்

### சர்வதேசத்தை கடிந்து கொள்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக யுதத்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவோரிடம் குறுக்கு விசாரணை நடத்தப்பட வேண்டுமென நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உளள நீதிமன்றமொன்றில் முன்வைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் விசேட பிரதிநிதிகளினால் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கையானது, குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பிலன செ ய ன்

20-ம் பக்கம் பார்க்க



## இலங்கைக்கெதிரான பிரேரணையுடன் தயாராக உள்ளது அமெரிக்கா!

### தடுக்க வலியுறுத்துகிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் தான் கொண்டு வரவுள்ள இலங்கைக்கு எதிரான யோசனையை நிறைவேற்ற அமெரிக்கா தயாராகி வருவதாக அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு எதிரான யோசனை கொண்டுவராமல் இருக்க, வடக்கில் இருந்து இராணுவத்தை திரும்ப பெறுமாறும் 13-வது அரசியல் அமைப்புத் திருத்

19-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா மாநாட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

ஜெனிவா மாநாட்டில் இரண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாடு நடைபெறவுள்ளது.

முதல் தடவையாக மனித உரிமைப் பேரவை மாநாட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பங்குபற்ற உள்ளனர்.

ஆளும் கட்சியின் இரண்டு முக்கிய அமைச்சர்களுடன், இரண்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க உள்ளனர்.

ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த சமரசிங்க ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் தலதா அத்துகோரல ஆகியோர் எதிர்க்கட்சியின் சார்பில் பங்கேற்க உள்ளனர் எனத் தெரியவருகிறது. (செ-11)

# காணாமல் போனோர் விசாரணைக்கு அருகில் மரணச்சான்றிதழ்களை வழங்கியது எப்படி?

## த.தே.கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பு

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்திருப்பதாக கூறிக்கொண்டு மறுபக்கம் காணாமற் போனவர்களுக்கு அரசாங்கம் மரணச்சான்றிதழ் வழங்குகின்றது. அப்படியென்றால், ஜனாதிபதி ஆணைக்குழுவை உடனடியாகக் கலைத்து தன் உண்மையான தோற்றத்தை சர்வதேசத்திற்கு அரசாங்கம் வெளிக்காட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமசந்திரன்,

ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மேற்கொண்டிருந்த போது, அவ்விடத்திற்கு அருகில் காணாமற்போனவர்களுக்கான மரணச்சான்றிதழ்கள் வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக கண்டறிவதற்கென ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் கடந்த 20 ஆம் திகதி திங்களன்று கிளிநொச்சியில் மேற்படி ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் அதற்கு அருகில் காணாமற் போனவர்களின் உறவினர்களை அழைத்து மரணச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.



மரணச்சான்றிதழ் வழங்குவதற்கு பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு யார் அதிகாரமளித்தது? ஒருவர் காணாமற்போனால் அவர் இறந்துவிட்டார் என்பதை அவரது உறவினர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் இறப்பு பதிவாளர் அல்லது கிராம அலுவலர் ஊடாகவே மரணச்சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், இங்கே மக்களை வலிந்து அழைத்து வந்து அச்சுறுத்தி மரணச்சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே இது முற்றிலும் சட்டத்திற்கு முரணான விடயமாகும். மேலும் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் காணாமற்போனவர்களுக்கும் மரணச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்றால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் நாங்கள் அவர்களை படுகொலை செய்துவிட்டோம் என்பதினை என்றார்.

மேலும், இவ்வாறு மரணச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஆணைக்குழு தலையிட்டு அதனை நிறுத்த வேண்டும். அல்லாது போனால் இதன் உண்மையான நிலைமையினை நாம் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம் என சுரேஸ் மேலும் தெரிவித்தார். (செ-11)


## தவறிவிட்டது

NP WF 2160 எனும் இலக்க சுபாரி மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப் பத்திரம், புகை பரிசோதனை படிவம் என்பன அடங்கிய றோஸ் கலர் பைல் ஆனைப்பந்திக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

(5406)

0774029878



## ஆசிரியர் தேவை

எமது கல்லூரியில் தரம் 6 - 11 வரை விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்கும் தரம் 6 - 9 வரை சிங்களம் கற்பிப்பதற்கும் ஆசிரியர் தேவை. பொருத்தமானவர்கள் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்
கிளி/முருகானந்தா கல்லூரி,
முரசுமோட்டை. (சி-6308)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6304)


## விழிப்புணர்வு கருத்தரங்கு

(பூநகரி)

பூநகரி பொலிஸ் பிரிவினரால் பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராம அலுவலகர்களுக்கும், பூநகரி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குமான விழிப்புணர்வு கருத்தரங்கொன்று பூநகரி பிரதேச செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (செ-84)

# வாழைக்குலைகளை திருடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி எல்லாளன்வாய் சனசமூக நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வாழைத் தோட்டத்தில்வாழைக்குலைகளைதிருடியவர்மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


நவக்கிரி எல்லாளன்வாய் சனசமூக நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வாழைத் தோட்டமொன்றில் வாழைக் குலைகளை களவாடிய வேளை அவ்விடத்தினால் பேருந்து நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த நபரொருவர் கண்டுள்ளார்.

அவர் ஊர் மக்களுக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்தில் கூடிய ஊர் மக்கள் வாழைக் குலைகளை களவாடிய குறித்த நபரை மரத்தில் கட்டிவைத்து நையப்புடைத்தனர்.

இதன் பின்னர் அச்சுவேலிப் பொலிஸாருக்குதகவல் வழங்கியவுடன் ஸ்தலத்திற்கு வந்த பொலிஸார் களவாடிய நபரையும் வாழைக் குலைகளையும் துவிச்சக்கர வண்டியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறாக வாழைக்குலைகளை களவாடிய நபர் மூன்று நாட்களுக்கு முன்னர் களவு வழக்கு ஒன்றிலிருந்து நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-24-23)

## கண்ணீர் அஞ்சலி



### நடராசா கமலநாதன்


புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கமலநாதனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், இவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்கள்
யாழ்ப்பாண வணிக நிலையம்,
யாழ்ப்பாண இரும்பகம்,
கதிரவன் இரும்பகம்.

(சி-6310)

## மரண அறிவித்தல்

### அரசலிங்கம் ஜெனிஸ்ரன்



கரும்புள்ளியான் பாண்டியங்குளத்தை வதிவிடமாகக் கொண்ட அரசலிங்கம் ஜெனிஸ்ரன் 21.01.2014 அன்று அகாலமரணமடைந்தார். அன்னார் அரசலிங்கம் - தேவி தம்பதிகளின் அன்பு மகனும் சாய்தா, ஜெனிற், ஜெமில்டன், ஸ்ரனில்டன், சஞ்சிகா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.01.2014 இன்று காலை 10 மணிக்கு நல்லடக்க ஆராதனையுடன் நடைபெற்று நட்டாங்கண்டல் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்

(சி-6309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இறைவன் வாழும் இல்லம்!

ஓர் ஊரிலே ஒரு மனிதன் இருந்தான்.

அவனுக்கு எல்லா வசதியும் இருந்தது.

ஒரு குறையும் இல்லை. அவன் ஒரு பெரிய வீட்டிலே தன்னுடைய குடும்பத்தோடு மிகவும் சௌகரியமாக வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் இரவு அவன் மிகவும் அசதியாக வந்து உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அப்போது ஒரு கனவு கண்டான்.

கனவிலே கடவுள் வந்து அவன் முன்னால் நின்றார்.

அதன் பின்னர் கூறினார்.

"இதோ பார்... நான் உன்னை விட்டுப் போகலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டேன்... அதனாலே நான் புறப்படுவதற்கு முன்னால் உனக்கு என்ன வேண்டுமோ கேட்டு வாங்கிக்கொள்! நான் சென்றதற்குப் பின்பு சிரமப்படாதே! இப்போதே கேள்... உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

கடவுள் திடீரென இப்படிக் கேட்டதும் அவனுக்கு எதை கேட்பது என்று ஒன்றும் புரியவில்லை. தலையை சொரிய ஆரம்பித்தான்.

கடவுள் பார்த்தார்.

"சரி... உனக்கு ஒரு நாள் அவகாசம் தருகின்றேன். அதுக்குள்ளே யோசித்து வை. நாளைக்கு இரவு மறுபடியும் உன் கனவிலே தோன்றுவேன்!" என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

அவன் விழித்துக்கொண்டான். மறுநாள் தான் கண்ட கனவை வீட்டிலே எல்லோரிடமும் சொன்னான்.

அவர்களிடம் யோசனையும் கேட்டான்...

"கடவுளிடம் என்ன கேட்கலாம்?" என்று அவர்களும் யோசித்துப் பார்த்துவிட்டு ஆளுக்கு ஒரு யோசனையை சொன்னார்கள்.

அவன் மனைவி என்ன சொன்னாள் தெரியுமா?

"இதோ பாருங்கள்... வேறு ஒன்றும் வேண்டாம். இப்போது நம்மிடம் எவ்வளவு சொத்து இருக்கிறதோ இதுமாதிரி இன்னொரு பங்கு வேண்டும் என்று கேளுங்கள்... அதுபோதும்!" என்றாள்.

சரி என்று தலையை ஆட்டினான்.

அதற்குள்ளே... அவன் பிள்ளை வந்தான்.

"அப்பா! நமக்கு போட்டுக் கொள்ள உடையும் சாப்பிடுவதற்கு சாப்பாடும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டும் என்று கடவுளிடம் கேளுங்கள்... அது போதும்!" என்றான்.

அடுத்தபடியாக அவனுடைய மகள் வந்தாள்.

"அப்பா! சுருக்கமாக கேளுங்கப்பா! வீட்டிலே தரித்திரம் ஏற்பட வேண்டாம் என்று ஒரே வார்த்தையில் கேளுங்கள். அதுதான் நமக்கு வசதியாக இருக்கும்!" என்றாள்.

சரி என்று தலையாட்டினான்.

இந்த நேரத்திலே அந்த வீட்டிலே வேலை செய்கின்ற அம்மாள் அங்கே வந்தார். அவர் ஒரு யோசனை கூறினார்.

"ஐயா! இந்தக் குடும்பத்திலே எல்லோரும் அன்பாக, பாசத்தோடு வாழ வேண்டும் என்று கேளுங்கள் அதுபோதும்" என்றார்.

இவன் அனைத்தையும் கேட்டு வைத்திருந்தான்.

மறுநாள் கடவுள் வந்தார்– இவன் கனவிலே!

"என்ன முடிவு செய்தீர்கள்? என்று கேட்டார்."

"இறைவா! எங்கள் வீட்டிலே எல்லோரும் அன்பாகப்–பிரியமாகப்–பாசமாக இருக்க வேண்டும். எங்களுக்குள்ளே சண்டையே ஏற்படக் கூடாது!" என்று கேட்டான்.

இறைவன் யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டான் இவன். இப்போது கடவுள் சொன்னார்:

"நீ இப்படி கேட்டதாலே நானும் என் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டியது தான்" என்றார்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை... "என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

கடவுள் சொன்னார்.

"மனிதனே! எந்த இடத்திலே அன்பும் பாசமும் இருக்கிறதோ அந்த இடத்திலேதான் நான் இருக்க ஆசைப்படுவேன். சண்டையில்லாமல் அமைதியாக இருக்கிற இடம்தான் நான் வாழுகின்ற இடம். அதனாலே நீ இப்படி என்னிடம் கேட்டது மூலமாக... நான் உன்னை விட்டுப் போக முடியாதபடி செய்து விட்டாய்! நான் இனிமேல் உன்னோடு தான் இருப்பேன்!" என்று சொல்லிவிட்டு கடவுள் மறைந்து விட்டார்.

மறுநாள் விடிந்தது.

ஒரு புது மனிதனாக இவன் எழுந்தான்.

இப்போது இந்தக் கதையை சற்று யோசித்துப் பாருங்கள்.

"அமைதியாக இருக்கிற இடத்திலேதான் இருப்பேன்" என்று கடவுள் சொல்கிறார்.

ஆனால் நாம் என்ன செய்கின்றோம்?

ஆண்டவன் பெயரைச் சொல்லி வாழ்க்கையை அமைதி இல்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவன் ஆண்டவன் முன்னால் வந்து நின்றான்.

"உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்றார் கடவுள்.

இவன் யோசித்தான்.

"வேறு ஒன்றும் வேண்டாம்... எதிர்த்த வீட்டுக்காரனிடம் 200 ரூபா கடன் வாங்கிவிட்டேன்...அவனே என் எதிரிலே வந்து நின்று... அந்தப் பணத்தை நீ எனக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். அப்படி அவனை உன்னாலே சொல்ல வைக்க முடியுமா?" என்றான் இவன்.

"அது மட்டும் முடியாது!" என்றார் அவர்.

"ஏன்?" என்று கேட்டான் இவன்.

"ஏனென்றால்... அந்த எதிர்த்த வீட்டுக்காரனே நான்தான். உன்னைப் பிடிப்பதற்கு வேறு வழி தெரியாமல்தான் இந்த வேடத்திலே வந்திருக்கின்றேன்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்த சிலர் முயற்சி

## வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்ட வரலாற்றில் தமிழ் முஸ்லீம்களுக்கிடையே எந்த வித பிளவுகளும் ஏற்படவில்லை. ஆனால் அரச அதிகாரிகளும் அரசியல் அதிகாரிகளும் தமிழ் முஸ்லிம்களுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர் என வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களுக்கு மட்டும் காணிப் பதிவு நடைபெறுவது குறித்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களுக்கு மட்டும் காணி விசாரணை நடைபெறுவது எந்தச் சட்டத்தின்கீழ் என்பதை குறிப்பாக ஏற்கனவே காணி விசாரணை நடைபெற்று தீர்மானிக்கப்பட்ட பின்பு அதே மக்களுக்கு மீண்டும் காணி விசாரணை நடைபெறுவதற்கு எந்தச் சட்டத்தின் பிரகாரம் அல்லது எந்த அதிகாரியின் கடிதத்தின் பிர காரம் நடைபெற்றது என்பதை வெளிப் படையாக தெரிவிக்க வேண்டும்.

கடந்த ஒரு வருட காலமாக காணியற்று விண்ணப்பித்த 4 ஆயிரத்து 77 தமிழ் முஸ்லிம் சிங்கள குடும்பங்களில் ஆயிரத்து 445 முஸ்லிம் குடும்பங்களுக்கு மட்டும் காணி விசாரணை நடத்தப்பட்டு ஏனைய மக்களை புறக்கணித்ததிற்கு உதவி அரசாங்க அதிபரும் காணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அதற்கான காரணத்தை பகிரங்கமாக கூற வேண்டும்.

போரினாலும் இயற்கை அழிவினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் செய்வதாக வெளிப் படையாக கூறிக் கொண்டு தமிழ் மக்களின் பிரதேசங்களில் ஏனைய இனங்களின் சனத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது சட்டத்திற்கும் முரணானது.

தமிழ் மக்கள் எல்லாவற்றிலும் புறக்கணிக்கப்படுவது தமிழ் மக்களுக்கு அரசும் அரச அதிகாரிகளும் செய்யும் துரோகமாகும்.

போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட காணியற்ற தமிழ் மக்களுக்கு உடனடியாக காணி விசாரணை நடைபெற வேண்டும். இல்லை எனில் அரசுக்கு எதிராக தொடர் உண்ணாவிரதங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்த மக்கள் தயாராக உள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் ஏற்கனவே காணி சம்பந்தமான தீர்மானத்தை அரசு நடைமுறைப்படுத்த வில்லை. இதற்கு காரணம் என்னவென்று உடனடியாக பதில ளிக்க வேண்டும்.

இனியாவது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இடையே வேறுபாட்டினை காட்டுகின்ற செயலை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# ஒருமாத கால விடுப்பு கோரி நளினி மனுத்தாக்கல்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் உள்ள நளினி, தம்மை பரோலில் (parole) விடுவிக்க கோரி தொடர்ந்த வழக்கில், வேலூர் சிறைத்துறை பதில் அளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், 90 வயதான தனது தந்தை சங்கர நாராயணனுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரை கவனிக்க, ஒரு மாதம் பரோலில் விடுவிக்க வேண்டும் என கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி வழக்கு தொடர்ந்தார்.

தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

எனது தந்தை சங்கர நாராயணன் உடல் நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார். 8வருடங்களுக்கு முன்பு அவரை நேரில் பார்த்தேன். அவரது கடைசி நாட்களில் அருகில் இருந்து கவனிக்க விரும்புகிறேன். தற்போது எனது தந்தையை கவனிப்பதற்காக ஒரு மாதம் பரோலில் விடுப்பு வழங்க எனது மனுவை பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 30 | 30 | 60 |
| கரட் | 40 | 60 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 90 |
| பாகற்காய் | 100 | 70 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 60 |
| பயற்றங்காய் | 160 | 60 | 120 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 |
| போஞ்சி | 60 | 100 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | — | 50 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 40 | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 70 | 90 | 120 |

# இராசி பலன்

23.01.2014

(தை 10, வியாழக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

சப்தமி மாலை 6.37 மணிவரை

சித்திரை பின்னிரவு 12.39 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

**மேடம்**

நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், அதிர்ஷ்டகரமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும்.

**இடபம்**

தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உடல்நலம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்**

நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் எடுப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**கடகம்**

பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்**

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், மனை சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு.

**கன்னி**

சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**

பயணங்களால் பலன் கிடைக்கும், குடும்பத்தில் பெரியவர்களின் சொல்லைக் கேட்டு நடப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்**

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு**

நினைத்த காரியங்கள் நிறைவேறலாம், வருமானம் திருப்திதரும், மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்**

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கூடும், போசன நன்மையுண்டு.

**கும்பம்**

முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்**

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா பயிரிட்ட குற்றச்சாட்டில் தாயும் மகளும் கைதாகினர்

(கரவெட்டி)

எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள வீடொன்றில் கஞ்சா செடி பயிர் செய்த குற்றச்சாட்டில் தாயும் மகளும் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் பளைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள வீடொன்றை சுற்றி வளைத்த பொலிஸார் அங்கு கஞ்சா செடிகள் பயிரிட்டு இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இதனையடுத்து, அவ் வீட்டிலிருந்த தாயையும் மகளையும் பொலிஸார் கைது செய்துள்ளதோடு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை போதைப்பொருள் விநியோக நாடாக இலங்கை மாறி வருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.கட்சி குற்றம் சுமத்தி வருகின்றது. இவற்றை விடவும் வன்னி யுத்தம் நிறைவுற்ற பின்னர் போதைப் பொருட்களின் வருகை அதிகரித்தே காணப்படுகின்றது.

குறிப்பாக எக்காலத்திலும் இல்லாத அளவில் வன்னியில் கஞ்சா போன்றபொருள் அதிகரித்துள்ளதுடன் அதனை வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-9-24)




# ரசிகர்களின் கட்டு மீறிய செயலால் போட்டியொன்று நிறைவுக்கு வந்தது

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் பாடசாலைகளிற்கிடை யிலான காற்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மின்னொளியில மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

போட்டிகளைக் காண பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர்.

மூன்றாமிடத்திற்கான போட்டி நிறைவுற்றதன் பின், வெற்றியாளர்களை தீர்மானிக்கும் போட்டி இடம்பெற்றது.

இறுதிப் போட்டி சமநிலைக்கு வந்ததால் சமநிலை உடைப்பு உதை மூலம் போட்டி முடிவு எடுப்பதாக இருந்தது.

எனினும் போட்டியில் ரசிகர்கள் மோதியமையால் போட்டி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் ரசிகர்கள் மைதானத்திற்குள் பிரவேசித்தனர். இவர்களை வெளியேற்றி போட்டிகளைத் தொடர பொலிஸார் ஒத்துழைக்கவில்லை.

அத்துடன் மைதானத்தில் இடையிடையே ஏற்பட்ட சண்டைகளை கண்டும் காணாமல் விட்டனர். இதன் காரணமாக மிகப்பெரிய மோதலொன்று இடம்பெற்றது. மோதல் ஆரம்பித்து 10 நிமிடங்களிற்கு பின்பே பொலிஸார் அவ்விடத்திற்குச் சென்றனர்.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள கூடிய போட்டிக்கு 7 பொலிஸாரே கடமைக்காக வந்ததுடன் கூட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் அவர்கள் தயாராக வரவில்லை.

எனினும் இதில் குழப்பத்திலீடுபட்ட ஒருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை போட்டியின் இடையிடையே முறுகல்களும் மோதல்களும் இடம்பெற்றன. பல இலட்சங்களை செலவழித்தும் வடக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சரை அழைத்தும் நடத்திய போட்டி வீணானதாக பலரும் கவலையடைந்தனர். (அ-23)

# உள்ளூராட்சிவார பரிசளிப்பும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று

(மானிப்பாய்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவும், கௌரவிப்பு நிகழ்வும் யாழ்.மருதனார் மடத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகு, யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சில், வடமாகாண சபையின் அமைச்சர்கள், வடமாகாண சபையின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தேசியமட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்ற வலி.பிரதேச சபைக்குட்பட்ட மாணவன் ம.தனுராஜ்., பிரதேச சபையின் தலைமையகம் அமைப்பதற்கு காணி அன்பளிப்புச் செய்த கொடையாளி மு.பொ. நல்லதம்பி, க.பொ.த உயர்தரத்தில் 3 ஏ சித்தி களை பெற்ற வாழ்வக மாணவன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-9-23)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற அதிபர் சின்னத்தம்பி நாகையா அகில இலங்கை சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டார்.

இவர் மேல்நீதிமன்ற நீதிபதி ஏ. பிறேமசங்கர் முன்னிலையில் கடந்த 21 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மானிப்பாய் நகர லயன்ஸ் கழகத் தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மருதனார் மடம், விவசாயப் பாடசாலை ஆகியவற்றின் பொருளாளரும் ஆவார்.

இவர் தொடர்ந்து பதினைந்து வருடங்களுக்கு மேல் தரம் ஐந்து புலமைப் பரிசில் வகுப்புக்களை தனது வீட்டில் வைத்து எவ்வித பணமும் அறவிடாமல் நடத்தி வருகின்றார். (அ)

# ஆன்மீக சொற்பொழிவு

(தும்பளை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடைபெறுகின்ற ஆன்மீக சொற்பொழிவு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் வடமராட்சி கல்வி வலய இந்து சமய ஆலோசகர் சி.நவரத்தினம் நாராயண வழிபாடு எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

எனவே, ஆர்வமுடையவர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-19)

# நெல்லியடி நகருக்கு நிரந்தரமாக பேருந்து நிலையம் அமைக்குக


வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் நீண்ட காலமாக பேருந்து நிலையம் இன்மையால் அப் பகுதிக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மேற்படி பேருந்து நிலையம் ஒன்றரை வருடங்களுக்கு முன் வீதி அகலிப்பு பணிகளுக்காக உடைக்கப் பட்டது.

இதற்கு பதிலாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு செல்லும் வீதியோரத்தில் தற்காலிக பேருந்து தரிப்பிட நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

ஆயினும், தற்காலிகமாக பேருந்து தரிப்பிடம் மக்களுக்கு ஏதுவாக அமையாமையினால் அவர்கள் பயன்படுத்தாமல் விட்டனர். இந் நிலையில் தற்பொழுது பாதுகாப்பற்ற இடத்திலிருந்து பயணிகள் பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக நிரந்தரமான பேருந்து தரிப்பிட நிலையம் இன்மையால் மழை, வெயில் காலங்களில் பல்வேறு இடர்களை மக்கள் எதிர்



நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள், மாற்றாற்றல் உடையோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பிரதேச சபையினரால் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்ட பேருந்து தரிப்பிட நிலையத்தினுள் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தி வருகின்றனர்.

எனவே, உரியவர்கள் இவ் விடயத்தில் கவனமெடுத்து பேருந்து தரிப்பிட நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-24)

# இளைஞர் கழக நிர்வாக தெரிவு

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் பிப்பிலி வீதியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

ஜே/140 கிராம சேவகர் பிரிவினைச் சேர்ந்த 13 வயது முதல் 29 வயதிற்குட்பட்ட இளை ஞர் யுவதிகளை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-23)

# சிவில் பாதுகாப்பு கூட்டம் நடைபெற்றது

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்திலுள்ளவர்களுக்கான சிவில் பாதுகாப்பு கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸாரினால் நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் பிரதேசங்களில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் உதவி புரிய வேண்டுமென பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமாரசிங்க கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகர சபையின் நகர பிதா ந.அனந்தராஜ், பிரதேச வைத்திய அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-9-24)





கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இராஜதந்திரிகளாக அரசியல் வாதிகளின் உறவினர்கள்

இலங்கையின் சார்பில் வெளியுறவு சேவையில் அரசியல்வாதிகளின் உறவினர்களும் நண்பர்களுமே அதிகமாக பணியாற்றுவதாக இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையின் முதல் பெண் ஷிராந்தி ராஜபக்ஷவின் உறவினர்கள், காலியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய அரசியல்வாதியினது மகன், சப்ரகமுவ மாகாணசபை முதல்வர் மஹிபால ஹேரத்தின் உறவினர், அமைச்சர் லச்மன் யாப்பா அபேவர்த்தனவின் உறவினர், நடிகர் ரவீந்திர ரண்தெனியவின் மகள், ஜனாதிபதியின் பெரும்பாலான உறவினர்களே வெளிநாட்டு சேவையில் பணியாற்றுகின்றனர்.

அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்கவின் மகளும் வெளிநாட்டு சேவையில் பணியாற்றுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸின் உறவினரும் வெளிநாட்டு சேவையில் பணியாற்றுகிறார்.

இந்நிலையில் 62 இராஜதந்திரிகளாக உள்ள இலங்கையர்களில் 48 பேர் அரசியல்வாதிகளின் உறவினர்களே பணியாற்றுவதாக ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் அழுத்தங்கள் கொடுக்கப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான அரசியல் நியமனங்கள், இலங்கையின் இயலாமையை மேலும் அதிகரிக்கும் என்று ஆங்கில செய்தித்தாள் கூறியுள்ளது. (அ-2)

# விஞ்ஞான சங்கத்தின் விஞ்ஞான போட்டிகள்

தமிழ்மொழி மூல மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கடந்த காலங்களில் போட்டிகளை நடாத்தி வந்துள்ளது.

அதே போன்று இவ் வருடமும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை(Quiz), கட்டுரைப் போட்டி (Essay) என்பன நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும்.

அனுமதி அட்டைகள் ஏற்கனவே மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் தங்கள் பாடசாலை அதிபரூடாக உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி ப.செல்வே ளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (அ)


## ST.JOHN'S COLLEGE AND THE JAFFNA ACADAMY & SCHOOL OF TECHNOLOGY

**1.The Cambridge Teaching Knowledge Test (TKT)**

is the leading international qualification for teachers of English.
Whether you teach English as a subject, or teach other subjects through English medium, TKT will help you improve your skills.
A six-month course which leads to TKT.
classes will be held on Monday, Tuesday & Wednesday, from 3.00-4.30 p.m., and will be taught by **Mick Chatwin**,
an experienced, Cambrige-qualified teacher from the UK

**2. Preliminary English Course for School-Leavers & Job-seekers**

A three-month foundation course in English ,covering the four skills of the language
Classes: Weekdays,3.30-5.30 p.m.

**3.Pre-school & Primary Teacher Training**

(with IT, English & Sinhala)
A one-year Diploma course (250 Hrs)
classes: 2nd &4th Saturdays,8.00 a.m.-4.00 p.m.
Workshops during school vacations
Applications close on 10th Feb 2014
Programme Registration & Commencement:
14th Feb 2014,4.00 p.m.
For more information contact:

**The Director,**
**The Jaffna Academy &**
**School of Technology**
**021 321 6006**

**The Principal**
**St.John's college,**
**Jaffna.**

(C/6303)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்:-04, ஆதன இலக்கம் :- 10/12 (புதிய பதிவு)
எச்சாட்டி வைரவர் கோவில் வீதி

வட்டாரம் 04 எச்சாட்டி வைரவர் கோயில் வீதி, சுதுமலை ஆதன இலக்கம் 10/12 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவில் பற்று, சுதுமலை இறை) குசவன்திடல் எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு (நி.ப. 02) இவ்வாதனமானது சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த கணேசராசா பெண் விஜயராணி அவர்களால் அறுதி உறுதி மூலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கோபிநாத் பெண் உதயராணி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14258 ஆம் இலக்க 2012.05.03 ஆம் திகதிய அறுதி உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபு அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். குசவன்திடல் நிலப்பரப்பு 02 உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் கோபிநாத் பெண் உதயராணி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் (5403)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 31 ½ செவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Accountant Management / கணக்காளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/2713 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/2722 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 15 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, AAT / Account Assistant (UK Citizen)<br>தொ.இ: B/2717 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 35 செவ் 1 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2723 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 70 ¼ சூரி செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / தபால் ஊழியர்<br>தொ.இ: B/2719 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 13 ¼<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bio Medicine / Company (UK – PR)<br>தொ.இ: G/2725 |
| பிறப்பு: 1920 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 8உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: NDT Civil Engineering / RTO (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/2720 | பிறப்பு: 1981 இந்து<br>கி.பா: 5 ¼<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: ஆயுள்வேத மருத்துவம் / ஆயுள்வேத மருத்துவர்<br>தொ.இ: G/2726 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## J.D.C.S.I CENTRE FOR HOLISTIC HEALING

DIPLOMA IN COUNSELLING

Applications are invited for the third batch of students for Diploma in Counselling conducted by the Centre for Holistic Healing (CHH) of the Jaffna Diocese of the Church of South India.

Those involved in social work, medical field and community developments as well as the ones requiring additional study, training and exposure in the field of counselling are welcome to apply to the Director, Centre for Holistic Healing, Diocesan Office, Vaddukkoddai before 31st January 2014.

Interviews are scheduled for 2nd february 2014 at 9.00 a.m. Those who fail to apply may also call in.

**Director**
**Dr.Ms. Thayalini Thiagarajah**
**Fax:+94-(0)112 582 015**
**Mob:+94(0)777370494**
**E.mail:thayathiyagarajah@gmail.com**
**Website:csijaffnadiocese.com**

**Diocesan Office,**
**Vaddukkoddai,**
**Sri Lanka**

(C/6302)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேரிகளற்ற நகரமாக இந்தியா அமைய வேண்டும் பிரணாப் முகர்ஜி

சேரிப்பகுதியே இல்லாத நகரங்களாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கேட்டுக் கொண்டார். டில்லியில் நேற்று முன்தினம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின் விருதுகள் வழங்கும் விழா நடந்தது.

இந்த துறையின்கீழ் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்டம், ஸ்வர்ண ஜெயந்தி ஷாகரி ரோஜ்கார் யோஜனா, தேசிய நகர வாழ்வாதார திட்டம் மற்றும் ராஜீவ் ஆவாஸ் யோஜனா திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுத்தல், வேலை வாய்ப்பு வழங்குதல் ஆகிய பணிகள் செய்யப்படுகின்றன. இதன் மூல்ம் சமுதாயத்தில் பின்தங்கியவர்களின் எண்ணிக்கையை குறைக்க மத்திய அரசு பாடுபடுகிறது. விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பேசியதாவது,

இந்தியாவில் சுமார் 9.3 கோடி மக்கள் சேரிப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். தங்குவதற்கு இடம் இல்லாமல் 1.8 கோடி பேர் தத்தளிக்கின்றனர். 2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரை 20 கோடி பேருக்கு மாற்று இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது நகர்புறங்களில் சேரியில் வசிக்கும் மக்களில் 30 சதவீதமாகும். அடுத்த 40 ஆண்டுகளில் உலகளவில் நகரங்களில் மக்கள் நெரிசல் அதிகம் உள்ள நாடாக இந்தியா திகழும். இதனால், சேரிப்பகுதி இல்லாத நகரங்களாக இந்தியாவை மாற்றுவது தான், நாட்டின் முன் உள்ள மிகப்பெரிய சவாலாகும் என்றார். (2)

# வீரப்பன் சகபாடிகளின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைப்பு

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

சந்தனக் கடத்தல் வீரப்பனின் சகபாடிகள் நால்வர் உட்பட 15 பேருக்கு வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையை இந்திய உச்சநீதி மன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

தமிழக கர்நாடக எல்லையில் பாலாறு அருகே உள்ள சுரக்காய் மருவு என்ற இடத்தில் கடந்த 9.4.1993 ஆம் திகதி வீரப்பனும், கூட்டாளிகளும் வனத்துறை வாகனங்கள் மீது கண்ணிவெடி தாக்குதல் நடத்தினார்கள்.

அப்போது வனத்துறை மற்றும் பொலிஸார் 22 பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் 124 பேர் மீது மைசூர் தடா நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

2001 ஆம் ஆண்டு தடா நீதிமன்றம் 38 பேரை விடுதலை செய்தது. 72 பேரை ஜாமீனில் விடுவித்தது. 7 பேருக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும் 7 பேருக்கு ஆயுள் தண்டனைய்யும் விதிக்கப்பட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரில் வீரப்பனின் சகபாடிகள் என கருதப்பட்டோருக்கு ஆயுள் தண்டனையை தூக்குத் தண்டனையாக அதிகரித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 பேரும் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினர். அது நிராகரிக்கப்பட்டது.

கருணை மனு மீதான முடிவை காலதாமதமாக எடுத்ததால் தண்டனையை குறைகக கோரி உச்ச நீதிமன்றத்தில் 'ரிட்' மனுவும் வழக்கை மீண்டும் விசாரிக்க கோரி மறு சீராய்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிடையே வீரப்பன் கூட்டாளிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான இறுதி தீர்ப்பு நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் விவாதத்துக்குப்- பின்னர் கூறப்பட்டது.

அப்போது ஒருவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து சுப்ரீம் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. இதனால் 4 பேரும் தூக்கு கயிறில் இருந்து தப்பினார்கள். (2)




## கேஜ்ரிவாலின் போராட்டம் வாபஸ்



மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு எதிராக தர்ணா போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக முதல்வர் கேஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டெல்லியில் ஆளும் அரசுக்கு கீழ்படியாத பொலிசாரை பணிநீக்கம் செய்ய வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட வேண்டும் எனவும் பொலிஸ் துறை மாநில அரசின் கீழ் வரவேண்டும் என்ற நோக்கத்தில் முதல்வர் கேஜ்ரிவால் அவரது அமைச்சர்கள் ஆரம்பித்துள்ள தர்ணா போராட்டம் தொடர்ந்தது.

கேஜ்ரிவால் போராட்டம் நடத்தும் பகுதியில் பாதுகாப்பு காரணமாக பல இடங்களில் தடுப்பு வேலிகள் வைத்திருந்தனர்.

இதனால் ஆம் ஆத்மி தொண்டர்கள் போராட்டக்களத்திற்கு வருவது கட்டுப்படுத்தப்பட்டது. இதனை அறிந்த முதல்வர் கேஜ்ரிவால் எழுந்து சென்று தடுப்புக்களை அகற்றி அனைவரும் போராட்டத்தில் இணையுமாறு கேட்டு கொண்டார், முதல்வர் என்பதால் பொலிசார் செய்வதறியாது திகைத்தனர்.

இதனைத் தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுப்போம்: நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். சட்டம் ஒழுங்கை பாதுகாத்திட முறைப்படி தேவையான நடவடிக்கைகள் எடுப்போம் என்று டில்லி பொலிஸ் அதிகாரி கூறினார்.

இந்நிலையில் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக கேஜ்ரிவால் அறிவித்துள்ளார், இதுகுறித்து அவர் கூறுகையில், எங்களின் கோரிக்கைகளை ஓரளவு ஆளுநர் ஏற்றுக்கொண்டார். டில்லியில் பெண்கள் பாதுகாப்பிற்கு தொடர்ந்து குரல் கொடுப்போம். பொலிஸ் எங்கள் கைகளில் இல்லை என முந்தைய அரசு கூறி தப்பித்து வந்தது. அதனை நாங்கள் செய்ய விரும்பவில்லை. சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரிகள் விடுமுறையில் செல்ல உத்தரவிடப்பட்டது எங்களுக்கு கிடைத்த வெற்றி என்று கூறியுள்ளார். (2)



செவிலியர்கள் பற்றி ஆபாசமாக பேசிய ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த குமார் விஸ்வாஸ் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கக் கோரி டில்லியிலுள்ள ஆம் ஆத்மி கட்சி அலுவலகம் முன்பாக செவிலியர்கள் அக்கட்சி சின்னமான துடைப்பத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# 25 தமிழக மீனவர்களை விடுவிக்காவிட்டால் போராட்டம்

## மீனவர்கள் எச்சரிக்கை

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 25 மீனவர்களை இன்று விடுவிக்காவிட்டால் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி டோக்கன் அலுவலகம் முன்பு, மீனவ சங்கத் தலைவர்கள் பங்கேற்ற அவசர கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய மற்றும் இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் உடனே அந்தந்த நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இலங்கை கடற்படையினர் பிடித்ததுச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 25 பேரையும் படகுடன் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இரு நாட்டு மீனவர்களிடையேயான பேச்சுவார்த்தை இன்னும் சிறிது நாட்களில் நடைபெற உள்ள நிலையில் தமிழக மீனவர்களை சிறைப்பிடித்துச் சென்றிருப்பது அதிர்ச்சியளிப்பதாக தெரிவித்தனர். சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்கள் மீது வழக்கு பதிவு செய்யாமல் நாளை வெள்ளிக்கிழமைக்குள் விடுவிக்குமாறும் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இல்லையெனில் நாளை வெள்ளி முதல் காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை இராமேஸ்வரம் மண்டபம் மீனவர்கள் 25 பேருக்கு எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி வரை நீதிமன்ற காவல் நீட்டித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

25 பேரையும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்க இலங்கை ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 பேரும் மண்டபம் மீனவர்கள் 8 பேரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி ராஜகோபால் பரமேஸ்வரி

(திதி:-23.01.2014- வியாழக்கிழமை)

குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எம் அன்புத் தெய்வமே ஆண்டொன்றென்ன
பல கடந்தாலும் ஆறாது உம் பிரிவுத்துயர்
என்றென்றும் உம் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.




இன்று 23.01.2014 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அருந்ததியார் வளவு,
அல்வாய் மேற்கு,
திக்கம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

(சி/6301)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது நூலக திறப்பு விழா

(கண்டாவளை)

விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தின் பொது நூலகத் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு ந.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன், சிறுவர் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி லெப்.கேணல் வினோஜ், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி ஜீ.எஸ்.பரமேஸ்வரன், விசுவமடு விவசாய பல.நோ.கூட்டுறவுச் சங்க அதிகாரி பி.சிவரூபன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் எஸ்.விதுலைநாதன் புதுக்குடியிருப்பு சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.விக்டர் ஜெயசிங்கம் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். (அ-9-263)




# யெகோவாவின் சாட்சியங்களின் விசேட மாநாடு

(பூந்தோட்டம்)

யெகோவாவின் சாட்சியங்களின விசேட மாநாடு வவுனியாவில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.40மணியிலிருந்து 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் 2.55 மணிக்கு கடவுளினுடைய வார்த்தையின் வல்லமை தொடர்ந்து மாற்றமடைய உங்களுக்கு உதவட்டும என்ற விசேட சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (அ-9-266)

# மாணவர்களின் தொடர்கற்றலுக்கு பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டும்

## ஆனந்தன் எம்.பி.வலியுறுத்து



(குருமன்காடு)

வறுமையைக் காரணமாகக் கொண்டு மாணவர்களின் கல்வியை இடைவிலக்க முனையாமல் தொடர்ந்தும் கல்வியை முன்னெடுக்க பெற்றோர் ஊக்க சக்தியாக இருக்க வேண்டும்

அப்போது தான் மாணவர்கள் தமது எதிர்கால இலட்சியங்களை கல்வியினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்

வவுனியா கருங்காலிக்குளம் அ.த.க.பாடசாலையின் தரம் ஒன்றுக்கான புதுமுக மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வவுனியாவின் எல்லைக் கிராமங்களில் கள்ளிகுளம் கிராமமும் ஒன்றாகும். அடிப்படை வசதிகள் அற்ற மிகவும் பின் தங்கிய இக் கிராமத்திலிருந்து இன்று இந்த மாணவர்கள் தமது பாலர் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு பலவித கனவுகளுடன் முதலாம் தரத்தில் காலடி எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

இந்த பாடசாலையில் பல்வேறு வளப்பற்றாக்குறைகள் இருப்பதை காண்கிறேன். அடிப்படை தேவைகள பூர்த்தி செய்யப்பட்டு மனமகிழ் கூடமாக இந்த பாடசாலை இருந்தால் தான் இந்த சின்னஞ்சிறு பிள்ளைகள் இன்னும் இன்னும் விருப்புடன் கற்றலில் ஈடுபட்டு மனவளம் பெறுவார்கள். மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை இந்த பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே எங்கள் எல்லோரதும் விருப்பமாகும்.

எனவே எனக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை நிதியை இந்த பாடசாலையின் அபிவிருத்திக்காக தருவேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் கூறுகிறேன்.

அதேவேளை இந்த கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு அண்மையில் தான் ஒரு ஏக்கர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

பெரும் காடாய் இருந்த காணிகளை சிரமங்களுக்கு மத்தியில் துப்பரவு செய்து தானியப்பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்தீர்கள்.

ஆயினும் பருவமழை பொய்த்ததாலும், பருவம் தப்பி மழை பொழிந்ததாலும் அறுவடையின் பயனை நுகர முடியாமல் வறுமை, தொழில் இன்மை போன்ற பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளை நீங்கள் சந்தித்திருப்பதையும் உணர்கிறேன். ஆனாலும் உங்களுடைய உழைப்பிலும், நம்பிக்கையிலும் தான் இந்த பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.


இவர்கள் கற்றலில் இருந்து இடைவிலகி விடாமல் தொடர்ந்தும் கற்பதற்கு ஊக்க சக்தியாக இருப்போம். இன்றைக்கு நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பதுயரங்களை நாளைக்கு இந்த பிள்ளைகள் அனுபவிக்கக்கூடாது எனும் விருப்பம் எங்கள் எல்லோருக்கும் உள்ளூர இருக்குமாயின் நிச்சயம் இந்த பிள்ளைகளுக்கு கல்வியைக் கொடுப்போம்.

கல்வி தான் எங்கள் மூலதனம். இந்த ஒரேயொரு மூலதனத்தை நாம் இவர்களுக்கு கொடுத்து விட்டால் போதும், நாளை இவர்கள் இந்த கிராமத்தை மட்டுமல்ல, இந்த மாவட்டத்தை, ஏன் எங்கள் தேசத்தையே கட்டியெழுப்பி விடுவார்கள் என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரால் 20ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை வவுனியா நொச்சிக்குளம் அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற மற்றுமொரு நிகழ்வில், போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 35 பேருக்கு ரீ.ஆர்.ரீ தமிழ் ஒலி வானொலி நேயர்களின் அன்பளிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட பாடசாலை காலணிகளையும் பாராளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

இவ்விரு நிகழ்வுகளிலும் வடமாகாணசபை உறுப்பினர் இந்திரராசா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் பரமேஸ்வரன்பாபு, திருமதி சிவசக்தி ஆனந்தன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ-9-250)



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் நாட்டிய பேராசான் கலைஞர் வேலானந்தனின் நெறியாள்கையில் வவுனியா-ஆடல் அணியினர் வழங்கிய குருசேத்திரம் ஆடற்கலை கிளிநொச்சி கூட்டுறவு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த ஆடற்கலை அரங்கில் தந்தை சிறையிருக்க மகன் இறந்த குடும்பத்திற்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கனடா தமிழ் உறவுகள் மாகாணசபை உப தவிசாளர் அன்ரன் ஜெகநாதன் ஊடாக வழங்கிய ஒரு தொகுதி பணத்தை பா.உறுப்பினர் சி.சிறிதரன் இறந்த சிறுவனின் சகோதரிக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# கடும் பிரயத்தனங்களின் மத்தியில் மின்சாரம் பெறப்பட்டுள்ளது

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன்

கடந்த சில மாதங்களாக இழுபறி நிலையில் இருந்துவந்த கண்டாவளை மற்றும் வட்டக்கச்சி பிரதேசங்களுக்கு இன்று மின் விநியோகம் வழங்கப்படுவதையிட்டு தாம் மகிழ்வடைவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கண்டாவளைப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மின்விநியோகத் திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கண்டாவளை மற்றும் வட்டக்கச்சி ஆகிய இரு பிரதேசங்களுக்கும் மின்சாரத்திற்கும் வீதிக்குமாக கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தது. ஆனால் மின்சாரம்தான் முதலில் நடைமுறைக்கு வந்ததாகவும் அதுவும் பெரும் பிரயத்தனங்களின் மத்தியில் தான் கொண்டு வரப்பட்டதாகவும் கூறினார்.

இந்தப் பிரதேசத்திற்கு மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்ததாகக் குறிப்பிட்டார்.

கண்டாவளைப் பிரதேசத்தின் மின்சார விநியோகம் மற்றும் வீதி அபிவிருத்தி பணியை எப்படி நகர்த்தலாம் யாரிடம் அந்த விடயங்களை எடுத்துரைத்து சரியான வழிமுறையில் செய்யலாம் என்று நம்பும் ஒரு பகுதியினரும் இதனை சர்ச்சையாக்கி பத்திரிகைகளில் வரச்செய்து அல்லது அரசியல் மேடைகளில் அதைப் பேசி குறைகளை மட்டுமே கூறி அதற்கு எண்ணெயை ஊற்றக் கூடிய வகையில் செயற்படுபவர்கள் என இரண்டு பகுதியினர் இருந்ததாகவும் இன்று அதற்கு முடிவு கட்டப்படடுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# தொ.நு.சேவை உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படவில்லை

## வடக்கு தொ.நு.உத்தியோகத்தர்கள் விசனம்

(பூந்தோட்டம்)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையிலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு உரிய காலத்தில் வடமாகாண சபை நிர்வாகத்தால் பதவியுயர்வுகளை வழங்காத நிலை காணப்படுகின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகவுள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு தடையாகவுள்ள திணைக்கள ஒழுங்கு விதிகள் மற்றும் அளவையிடுதலும் மட்டம் பார்த்தலும் பாடங்களுக்கான செய்முறை பரீட்சையை நிலுவையாக வைத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

அதற்கான பெறுபேறுகளும் 2013 ஆம் வருட நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட பொழுதிலும் மற்றைய பாடமாகிய திணைக்கள ஒழுங்கு விதிகள் என்ற பாடத்திற்குரிய பரீட்சை இது வரை நடத்தப்படவில்லை.

இப் பாடத்திற்கு தோற்றுவதற்கு தகுதியானவர்கள் பற்றியும் குறித்த ஓர் உத்தியோகத்தருக்கு ஒரே பாட விதானத்தை உடைய ஒரே பரீட்சையை 1, 2, 3ஆம் திணைக்களப் பரீட்சைகள் மூலம் மூன்று முறை அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணான முறையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதன் மூலம் அவர்கள் தமது பதவியுயர்வுகளை உரிய காலங்களில் பெற்றுக்கொள்ள விடாது தடுப்பதற்கு ஓர் உத்தியாக அல்லது தடைக்கல்லாக வடமாகாண சபை வேண்டுமென்றே பயன்படுத்த முற்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் இதனை ஈடுசெய்வதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் முன்னுக்கு பின் முரணான வகையில் சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

10/2012 இல 24.09.2013 ஆம் திகதிய சுற்று நிருபம் மூலம் பரீட்சைக்குரிய திகதி குறிக்கப்பட்ட பொழுதிலும் எந்தவிதமான காரணங்களுமின்றி வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் 10/2012(II) இல 13.12.2013 ஆம் திகதிய சுற்று நிருபம் மூலம் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இப் பாடம் இலங்கையின் ஏனைய மாகாணக்களுக்கு முரணான வகையில் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தினால் மட்டும் நடத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையிலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தங்கள் மாகாணத்திலுள்ள மிகவும் கஷ்டப் பிரதேசங்களிலும் சேவையாற்றி வருகின்றார்கள்.

எனவே வடக்கு மாகாண சபையின் ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் ஆகியோர் குறித்த இவ் விடயம் தொடர்பாக பக்க சார்புகளோ அல்லது பாரபட்சங்களோ இன்றி இதய சுத்தி, விசுவாசம் மற்றும் மனிதாபிமான ரீதியில் இப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையிலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகளை உரிய பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்தி வழங்க ஆவன செய்யவேண்டுமென வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

697

# கண்டோத்கஜன்



கடோத்கஜன், பீமனுக்கும், இடும்பி எனும் ராட்சசிக்கும் பிறந்தவன். தன் தந்தையைப்போல் பலமும், தாயைப் போல் மாய வித்தைகளில் தேர்ச்சியும் பெற்றிருந்தான். மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்குப் பேருதவி புரிந்த அவனின் வாழ்க்கை வரலாறு சுவாரசிய மானது. பாண்டவர்கள் தங்கியிருந்த அரக்கு மாளிகை துரியோதனால் தீக் கிரையாக்கப்பட்டது. தெய்வாதீனமாகப் பாண்டவர்கள் தீயில் சிக்காமல் தப்பியோடி விட்டனர்.


கங்கை நதியைக் கடந்து தென் திசை யில் வெகுதூரம் நடந்து சென்ற அவர்கள், இறுதியில் களைத்துப்போய் ஓர் ஆல மரத்தினடியில் படுத்து உறங்கிவிட்டனர். பீமன் மட்டும் உறங்காமல் காவல் காத்துக் கொண்டிருந்தான். அவர்கள் ஓய்வெடுத் துக் கொண்டிருந்த பிரதேசத்தில் இடும்பன் என்ற ஒரு பயங்கர ராட்சசன் வசித்து வந் தான். அவன் கண்களுக்கு, மரத்தடியில் இருந்த பாண்டவர்கள் புலப்பட்டனர். உடனே அவன் தன் தங்கையான இடும்பியை அழைத்து, பாண்டவர்களைக் காட்டி "நீ அவர்களைக் கொன்று சமைத்து வை!" எனக் கூறி விட்டுச் சென்றான்.

இடும்பி உடனே அவர்களை அணுகி னாள். காவல் காத்துக் கொண்டிருந்த பீம னைக் கண்டதும், அவள் தன் மனதைப் பறிகொடுத்தாள். உடனே தன் ராட்சச உருவத்தை மாற்றிக் கொண்டு, ஒரு அழகான மானிடப் பெண் போல் உருவ மெடுத்து பீமனை நெருங்கினாள். "ஐயா! நங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? இங்கு உறங்குபவர்கள் உங்களுடைய சகோத ரர்களா?" என்று விசாரித்த இடும்பி, தொட ர்ந்து, "உங்களைப் பார்த்தவுடன் என் மனதில் உங்களையே கணவராக அடைய வேண்டும் என்று ஆசை தோன்றிவிட் டது. உண்மையில், உங்களைக் கொல் வதற்காக என் அண்ணன் இடும்பன் இங்கு எனனை அனுப்பினான். ஆனால், உங்கள அழகில் மயங்கி அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்" என்றாள்.

அதற்குள் தொலைவிலிருந்து இடும்பி யின் செயலை கவனித்த இடும்பன், அவள் மீது கோபம் கொண்டு கத்தினான். பிறகு பீமன் மீது பாய்ந்து அவனைத் தாக்க, பீமன் இடும்பனை அப்படியே தூக்கிக் கொண்டு தொலைதூரம் சென்று கீழே போட்டான். பிறகு இருவருக்கும் இடையே யுத்தம் மூண்டது. பீமன் இடும்பனை கால்களி னால் மிதித்துத் துவைத்துக் கொன்று விட்டான்.

பீமனிடம் மனத்தைப் பறிகொடுத்த இடும்பி, குந்தியிடமும் யுதிஷ்டிரரிடமும் தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டாள். குந்தியும் அவள திருமணத்திற்கு சம்மதம் தெரி வித்தாள். தாய் சொல்லைத் தட் டாத பீமன் இடும் பியை மணம்புரிய சம்மதித்தான். ஆனால், தங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கும் வரை மட்டுமே இடும்பியோடு சேர்ந்து வாழ் வேன் என்று ஒரு நிபந்தனை போட்டான். பிறகு தாயின் ஆசியுடன் பீமன் இடும் பியை மணம் புரிந்தான். இடும்பி பீமனை அழைத்துக் கொண்டு ஆகாய மார்க்க மாகப் பறந்து சென்றாள்.

காலக்கிரமத்தில் இடும்பிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்தவுடனேயே பெரிதாகிவிட்டது. அவ் வாறு விரைவாக வளர்ந்த அந்த இளைஞ னின் தலையில் முடியே இல்லை. அத



னால் அவனுக்குக் கடோத் கஜன் (தலையில் முடிய ற்றவன்) என்று பெயரிட்ட னர். தன் பெற்றோரை வணங்கிய கடோத்கஜன் "நான் தனியாக வசிக்க விரும்புகிறேன். தேவைப் பட்டால் என்னை மனதில் நினைத்தால் போதும்! நான் எங்கிருந்தாலும் உடனே உங்களிடம் வந்து வடுவேன்" என்று சொல்லி விட்டுப் பிரிந்தான்.

பிறகு அவன் வடக்குத் திசையில் சென்று, அங்கி ருந்த ராட்சசர்களுக்குத் தலைவன் ஆனான்.....

(தொடரும்)

## சுபாஸ் சந்திரபோஸ்



நேதாஜி என்று இந்திய மக்களால் மரியா தையுடன் அழைக்கப்படும் சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவில் ஒடிசா மாநிலத்தில் கட்டாக் எனும இடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி வங்காள இந்து குடும்பத்தில் பிறந்தார்.

இவர் இந்திய சுதந்திரப் போராட்டத் தலை வராவார். இரண்டாம் உலகப் போர் நடை பெற்றபோது வெளிநாடுகளில் போர்க் கைதி களாய் இருந்த நூற்றுக்கணக்கான இந்தியர் களை ஒன்றுதிரட்டி இந்திய தேசிய ராணுவ த்தை உருவாக்கி அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியவர்.

இவரது தந்தையின் குடும்பம் 27 தலைமுறையாக வங்க மன்னர் களின் படைத்தலைவர்களாகவும் நிதி மற்றும் போர் அமைச்சர்களாகவும் பணியாற்றி வந்த பெருமைமிக்க மரபுவழியை உடையது.

இவரது தாயார் பிரபாவதிதேவி "தத்" எனும் பிரபுக்குலத்திலிருந்து வந்தவர். 8 ஆண் பிள்ளைகளையும் 6 பெண் பிள்ளைகளையுமகொண்ட இக்குடும்பத்தில் ஒன்பதாவது பிள்ளையாகப் பிறந்தவரே சுபாஸ் சந்திர போஸ். இவரது தாயார் மிகுந்த தெய்வ பக்தி மிக்கவர். அதனால் சுபாசும் சிறு வயது முதலே விவேகானந்தர் போன்ற ஆன்மிக பெரியார்களின் பால் ஈடுபாடுடையவராயும் அவர்களின் அறிவுரைகளைப் படித்து வருப வராயும் இருந்தார்.

அக்காலத்தில் நாட்டுச் சூழ்நிலை பற்றி அடிக்கடி வீட்டில் விவாதங் களில் ஈடுபட்ட சுபாசைப் பார்த்த அவரது தந்தையார் இவரை அரசியலில் ஈடுபடுத்த விரும்பாது லண்டனுக்கு ஐ.சி.எஸ் தேர்வுக்குப் படிக்க அனுப்பி வைத்தார்.

சுபாஷ் சந்திர போஸ் பிரித்தானியாவிற்கெதிரான போராட்டத்திற்கான பெரும் தூண்டுதல் மூலமாக பகவத் கீதையைக் கருதினார். சுவாமி விவேகானந்தரின் சர்வமயவாதம் பற்றிய கற்பித்தலும் தேசியவாத, சமூக சிந்தனையும் சீரமைப்பு எண்ணங்களும் சிறு வயதிலேயே இவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்துசமய ஆன்மீக் கருத்துக்களே இவரின் பின்னாளைய அரசியல், சமூக எண்ணங்களுக்கு வித்திட்டதாக பல அறிஞர்கள் கருதுகிறார்கள். இந்து ஆன்மீகத்தின் தாக்கம் இருந்தாலும் இவரிடம் மதவெறியோ பழைமைவாதமோ இருக்கவில்லை . சுபாஷ் தன்னை சமதர்மவாதி என அழைத்துக்கொண்டார். இந்தியாவில் சமதர்மக் கொள்கையின் முன்னோடி சுவாமி விவேகானந்தர் என நம்பி னார். 1992-ல்சுபாஷ் சந்திரபோசுக்கு இறப்புக்குப் பின்னான இந்தியாவின் மிக உயரிய விருதான *பாரத ரத்னா* விருது வழங்கப்பட்டது.



# 01.2014 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1368 - சூ யுவான்ஷாங் சீனாவின் பேரரசனாக முடி சூடினான். இவனது மிங் பரம்பரை 3 நூற் றாண்டுகள் சீனாவை ஆண்டது.
- 1556 - சீனாவின் சாங்சி மாநில நிலநடுக்கத்தில் 830,000 வரையானோர் இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப் பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.
- 1570 - ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது.
- 1639 - பெருவைச் சேர்ந்த யூதக் கவிஞர் பிரான்சி ஸ்கோ மல்டொனால்டோ டி சில்வா எரியூட்டிக் கொல்லப்பட்டார்.
- 1719 - புனித ரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ்டைன் நாடு உருவாக்கப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக் கக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1793 - ரஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பிரித்த னர்.
- 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண் டும் கைப்பற்றிக் கொண்டது.
- 1874 - விக்டோரியா மகாராணியின் மகன் எடின் பரோ தோமகன் அல்பிரட் ரஷ்யாவின் மூன் றாம் அலெக்சாண்டரின் ஒரே மகளான மரீயா அலெக்சாந்திரொவ்னாவை திருமணம் புரிந் தார்.
- 1950 - இஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரே லின் தலைநகராக அறிவித்தது.
- 1957 - சென்னை மாநிலத்தில், தமிழ் ஆட்சி மொழி யாக அறிவிக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1876 - ஒட்டோ டியெல்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர் மனியர் (இ. 1954)
- 1897 - சுபாஷ் சந்திர போஸ், இந்திய சுதந் திரப் போராட்ட வீரர் (இ. 1945)
- 1907 - ஹிடெக்கி யுக்காவா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர் (இ. 1981)
- 1915 - ஆர்தர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற பிரித் தானியர் (இ. 1991)
- 1918 - கேர்ட்ரூட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ. 1999)
- 1929 - ஜோன் போல்யானி, நோபல் பரிசு பெற்ற கனடியர்
- 1930 - டெரெக் வால்கொட், நோபல் பரிசு பெற்ற எழுத தாளர்

இறப்புகள்

- 1873 - [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்



போக முனிவர்

### போக முனிவர் வனம்

கும்ப மலையிலுள்ள அகத்தியர் மலையைக் கடந்து, மேற்குப் பாதை வழியாக அநேக வனங்களையும், மலை ஆறுகளையும் கடந்து வந்தால், குளிராட்டிப் பொய்கை இருக்கிறது அந்தப் பொய்கைக்கு தென் மேற்கு மூலையில், போக மகரிஷி ஆசிரமம் இருக்கிறது. இந்த ஆசிரமத்திற்கு அருகில் பூஞ்சுனை என்னும் பொய்கை ஒன்றும் இருக்கிறது.

### உரோமரிஷி வனம்

புசுண்ட மகரிஷி ஆசிரமத்துக்கு தென்மேற்குத் திசையில் அரை நாழிகை வழி தூரம் போனால், எல்லைக் குட்டமும் மண்மலைக்காடும் இருக்கின்றன. அவ்வழியே போகும் பாதையில் கூப்பிடு தூரம் போனால், பல மரங்கள் சூழ்ந்த உரோம மகரிஷி ஆசிரமம் உள்ளது. இந்த ஆச்சிரமத்தை அடுத்த கீழ்த்திசையில் பெரியதொரு கல்விளக்கு இருக்கிறது. இந்தக் கல்விளக்குக்கு கதையொன்றும் சொல்லப்படுகிறது.

### கல் விளக்கு

முன்னொரு காலத்தில் இந்த வனத்தில் மாலினி மகரிஷி என்பவர் தவச்சாலை அமைத்து தம் பத்தினியான மாதேவியுடன் இல்லறம் நடத்தி வந்தார். அவர்களுக்கு எதிர்காலத்தில் இல்லறத்தின் பயனாய் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன.

அவர்களைச் சீராட்டி, பாராட்டி வளர்த்து பின்பு, இரண்டாவது அகவையின்போது, இரண்டு குழந்தைகளும் ஒன்றுக்கொன்று ஆ..ஊ.. என்று மழலையாடிக் கொண்டிருந்தன.

அப்போது தற்செயலாய் அந்தப் பக்கம் வந்த மாலினி முனிவர் அவைகளின் பொருள் தெரிந்து சிரித்தார்.

"என்ன அதிசயத்தைக் கண்டு அப்படிச் சிரித்தீர்கள்?" என அங்கு வந்த அவர் மனைவி கேட்க, "அவர்கள் தமது பூர்வஜென்ம வினையைத் தீர்ப்பது குறித்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர்" என்றார்.

குழந்தைகளின் பூர்வஜென்மம் என்றதும் ஆவல் மிகுதியால் "எனக்கும் அதனைக் கூறுங்களேன்" என்று ஆவலுடன் கேட்டாள் மனைவி. அவரது பூர்வஜென்ம வரலாற்றை விளக்க ஆரம்பித்தார்.

"மாதேவி! நான் முன்ஜென்மத்தில் வைசிய குலத்தில் பிறந்து அனேக



ஊரோம முனிவர்

வியாபாரங்களைச் செய்துகொண்டு வரும்பொழுது, ஒரு தடவை வாணிபன் ஒருவனிடத்தில் கடனாகப் பத்துக் குடம் எண்ணெய் வாங்கிவிட்டு அதற்கான விலையைக் கொடுக்காமல் மறந்துவிட்டேன்.

இதேபோல, என்னைப்போல் வணிகன் ஒருவன், வியாபார அவசரத்திற்காக என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் வாங்கி அதனைத் திருப்பித் தராமலேயே இருந்துவிட்டான். அந்த இருவரும்தான் இந்த ஜென்மத்தில் எனக்கு குழந்தையாகப் பிறந்து, ஒருவன் கடனை வசூலிக்கவும், ஒருவன் கடனைத் தீர்த்துவிட்டுப்போகவும் பிறந்திருக்கின்றதாக குழந்தைகளுக்குள் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்" என்றார்.

திடுக்கிட்ட மகாதேவி," சுவாமி, இந்தக் குழந்தைகள் இரண்டும் நம்மிடத்தில் வளர்ந்து கடைசியாக நாம் கொடுக்க வேண்டிய எண்ணெய்க் கடனைப் பெற்றுக்கொண்டும், நமக்குத் தரவேண்டிய ஆயிரம் பொன்னைச் சம்பாதித்துத் கொடுத்துவிட்டும் போய் விடுவரே. அப்போது, நாம் என்ன

**ஆன்மீகம் 11**

செய்வது?" என்று கவலைப்பட்டாள்.

மாலினி முனிவரும், "எப்படியாயிருந்தாலும் நாம் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும். விரைவில் கடனை அடைப்போம். என்று கூற மாதேவியும் அதற்கு உடன்பட்டார்.

மாலினி முனிவரும் தம் சீடனிடம் பத்துக் குடம் நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டு வரும்படி செய்து, கல் விளக்கொன்று அமைத்து, அதற்குத் தக்க திரி அமைத்து, அவ்விளக்கு நிறைய எண்ணெய் ஊற்றி, தன் இரு குழந்தைகளையும் அவ்விளக்கின் பக்கத்தில் படுக்க வைத்துத் தீபமேற்றிக் கொண்டு வந்தனர்....

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



இசையமைப்பாளர் எஸ்.எம்.சுப்பையா நாயுடு

23

நல்ல மழை. செம்மலின் பிளைமௌத் கார் லாயிட்ஸ் சாலை வீட்டின் முகப்பில் நின்றிருந்தது. ஓட்டுநர் ராமசாமி முன்னறையில் இருந்தார். நானும் இசையமைப்பாளர் எஸ்.எம் சுப்பையா நாயுடுவும் வாசல்- முன் வராண்டாவில் அமர்ந்திருந்தோம். செம்மல் உள்ளே இருந்தார்.

அப்போது நாயுடு "ரவீந்திரன்! கார்லே எங்கேயெல்லாமோ போயிருக்கிறேன். மழையிலே போகனும்னு ஆசை. இப்போ கார்லே போகனும். திங்கிறதுக்கு கேக்கு, சிப்ஸ், பகோடா எல்லாம் வைச்சுக்கணும். காப்பியும் பிளாஸ்கிலே இருக்கணும். தின்னுக்கிட்டு எதைப்பற்றியாவது பேசிக்கிட்டே போனால் நல்லாயிருக்குமெல்லே" என்றார்.

"இருக்கும் இப்ப எதுக்கு அதெல்லாம்" என்றேன்.

அப்போது செம்மல் வெளியே வந்தார். ஓட்டுநர் இராமசாமியைக் கூப்பிட்டார். அவர் வந்ததும், உள்ளே அழைத்துப் போனார். அவர் திரும்பி வந்து காரை எடுத்துக்கொண்டு வெளியே போய் அரைமணி நேரம் கழித்து வந்தார். மழையின் வேகம் குறைந்திருந்தது.

அவர் வந்ததும் செம்மல், வெளியே வந்து இசையமைப்பாளர் சுப்பையா நாயுடுவைப் பார்த்து "அண்ணே வாங்க வெளியே போகலாம்... ரவீந்திரன்! நீரும்தான்" என்று



வழக்கமாக உட்காரும் முன்சீட்டில் செம்மல் உட்கார, நாங்கள் பின் சீட்டில் உட்கார்ந்தோம். கார் புறப்பட்டது.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கார் போனது. அமைந்தகரையைத் தாண்டிப் போய் விட்டோம்.

அப்போது நாயுடு "இப்போ நாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டார்.

"... எனக்கென்ன தெரியும்? நீங்கதானே ரவீந்திரன் கிட்டே உங்க ஆசையைச் சொன்னீங்க. அதை நிறைவேற்றவேணும்னு வந்திருக்கிறேன். கார்லே நீங்கள் கேட்டதெல்லாம் வச்சிருக்கிறேன் தின்னுங்க. உங்க தயவுல நானும் திங்கிறேன். எதைப்பத்தியாவது பேசலாம். கார் பெங்களூரை நோக்கிப் போகுது. அங்கேயும் போயி பேசலாம்" என்றார் செம்மல்.

எஸ்.எம்.எஸ் நாயுடு அசந்து, "அண்ணே சும்மா சொன்னேன்" என்று சொல்ல... "சும்மாவோ சுமந்துக்கிட்டோ, புறப்பட்டாச்சு, எங்கேயும் போகலாம். எதையும் பேசலாம். சாப்பிடுங்க முதல்ல" என்று கேக்குப் பெட்டியைப் பிரித்தார்.

கார் பூந்தமல்லியை அடைந்தது. நாயுடு, "இவங்க கிடக்கிறாங்க, நீபோரூர் வழியா திரும்பிப்பா ராமசாமி" என்றார் எஸ்.எம். சுப்பையா. ராமசாமி பக்கத்திலிருந்த செம்மலைப் பார்த்தார். "இப்ப முதலாளி நான் இல்லேப்பா, நாயுடுதான். அவங்க சொல்லுறதையே கேளு" என்றார். கார் போரூர் வழியே திரும்பியது.

நாயுடு, "சரி! தின்னாச்சு அடுத்த கட்டம் பேசணும் இல்லையா? ரொம்ப நாளா ஆசை ஒண்ணு சொல்ல, தனிமை கிடைக்கலே ரவீந்திரன் இருந்தா பரவாயில்லே, பேசலாம்" என்றார்.

செம்மல் அவர் முகந்தெரிய திரும்பி உட்கார்ந்தார்.

"ஒண்ணுமில்லே உங்க நடிப்பைப் பத்திதான். அதைக் கொஞ்சம் மாத்திக்கணும்" என்றார்.

செம்மல் முகத்தில் கேள்விக்குறி! "எப்படி?" எனக்கேட்டார்.

நடிப்புன்னா ஆக்ஷன் பற்றி சொல்லலே. ட்ரஸ்ஸை அதாவது, சரித்திரப் படங்களை விட்டுட்டு ஷர்ட்,பேண்ட் போட்டு நடிக்கணும். மலைக்கள்ளன் பாதிக்குமேலே ரஹீம் பாய் வேஷம். அப்ப் நடிச்ச அந்தமான் கைதி, என்தங்கை-யிலே வேஷ்டி சட்டைதான். பணக்காரியிலே பேண்ட் ஷர்ட், அதில நீங்க அழகாயிருந்தீங்க. இனிமேல் அப்படி மாத்துங்களேன்" என்றார்.

செம்மல்... "அதுக்கு தக்க கதை வேணுமே" என்று... சொல்ல "சரின்னு சொன்னா, கதைக்கா பஞ்சம்" என்றார் நாயுடு... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசுடன் மாகாணசபை இணைந்து செயற்பட வேண்டும்

## அமைச்சர் விதாரண வலியுறுத்து





தேர்தலில் அரசு தோல்வியடைந்தாலும வடக்கு மாகாணத்தை பிரித்து பார்க்கவில்லை.இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்காக அதிகளவு நிதியினை இறுதி வரவு செலவுத்திட்டத்திலும் ஒதுக்கீடு செய்துள்ளது என விஞ்ஞான அலகுகள் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுடன் மாகாண சபை இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து யாழ்.நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்திற்கு பின்பு முதன் முறையாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடத்தி மாகாண சபைக்கு என்று ஒரு நிர்வாகத்தை அமைத்து அதிகாரங்களை பகிர்ந்தளித்துள்ளார.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு உதவி செய்யவேண்டும். அரசாங்கத்துடன இணைந்து செயற்படுவதன் மூலம் உதவிகளைப்பெற்றுக் கொள்வது இலகுவானதாகயிருக்கும்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 21 ஆம்திகதி நடைபெற்ற தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைந்தாலும் கூட வடக்கு மாகாணத்தை பிரித்து பார்க்கவில்லை இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்காக அதிகளவு நிதியை இந்தவருடத்திற்கான வரவு வெலவுத்திட்டத்திலும் ஒதுக்கீடு செய்துள்ளது.

நிதி ஒதுக்கீட்டில் நாட்டிலுள்ள மாகாணங்களில் மூன்றாவது இடத்தை வடக்கு மாகாணம் பெற்றுள்ளது. தேர்தலில் தோல்வியடைந்ததற்காக இந்த மாகாணத்தின் அபிவிருத்தியை அரசாங்கம் புறம் தள்ளவில்லை.

மேலும், காணி பொலிஸ் அதிகாரங்களை பொறுத்தமட்டில்மாகாண சபைக்கும் மத்திய அர சாங்கத்திற்குமிடையில் விரிசலை ஏற்படுத்த கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையில் உறவுநிலை பலப்படுத்தப்படும் போது தான் அந்தமாகாணத்திற்கான அபிவிருத்திப்பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படும்.

அத்தோடு மாகாண சபைகளின் பரிந்துரைகளை மத்திய அரசாங்கம் ஏற்று செயற்படுதில் தடைகள் இருக்கக்கூடாது.

அதேவேளை மத்திய அரசாங்கத்தின் கீழ் முக்கிய துறைகள் இருப்பதன் ஊடாகவே அபிவிருத்தி நடவடிக்கைகளும் விரைவுபடுத்தப்படுகின்றன.

குறிப்பாக பிரதான வைத்திய சாலைகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருந்தால் அவற்றுக்கான அபிவிருத்திப்பணிகளும் அதிகளவில் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

அத்தோடு இந்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

# ஓய்வூதியம் வழங்கும் திட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி

2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியின் படி விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி பீ. எம். எஸ். பட்டகொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் அம்பாந்தோட்டையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வின்போது விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டத்தில் நன்மைபெறும் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 659 பேருக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ள விவசாயிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் மூலம் இவர்கள் நன்மையடையவுள்ளனர்.

18 வயதில் இப்புதிய ஓய்வூதிய திட்டத்துக்கு சேரும் ஒருவர் 59 வயதுவரை சந்தாப்பணத்தை செலுத்த வேண்டும். 60 வயது முதல் ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்படும். ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை 60 வயது தொடக்கம் 78 வயது வரை ஓய்வூதியமாக பெறமுடியும் என்றும் மேலதிக செயலர் பட்டகொட தெரிவித்தார். (அ-2)

# மீனவர் பிரச்சினை தொடர்பில் ஜெயா மன்மோகனுக்கு கடிதம்

(சென்னை)

மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் 27 ஆம் திகதி இந்திய-இலங்கை மீனவ பிரநிதிகள் பேச்சுவார்த்தை நடத்த உள்ள நிலையில், மீண்டும் தமிழக மீனவர்கள் 25 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. இலங்கையின் இந்த நடவடிக்கை மீனவ சமுதாயத்தினரிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனே விடுவிக்க பிரதமர் மன்மோகன் சிங் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமருக்கு அவர எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக 27 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில், எனது அறிவுறுத்தலின்பேரில், தமிழக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை செய்யத் தொடங்கியது.

இதேபோல் இலங்கை சிறையிலுள்ள 275 மீனவர்களையும் அவர்களின் 84 படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் எனது அரசு வலியுறுத்தியது. அதன்படி மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு, ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கும் நிலையில் இரா மேஸ்வரத்தைச் சேர்ந்த 25 மீனவ ர்களை இலங்கை கடற்படை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

அவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கு முன்பே விடுதலை செய்ய தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும. மேலும், ஏற்கனவே இலங்கை சிறைகளிலுள்ள 64 மீனவர்கள, அவர்களின் 69 படகுகளும் விடுவிககப்பட வேண்டும். இவ்வாறு ஜெயலலிதா அதில் கூறியுள்ளார். (அ-2)

# ஈழத் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு புலம்பெயர் உறவுகள் உதவ வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி கோரிக்கை

இன்று எம் முன்னுள்ள பெரும் சவாலான விடயமாக இளைஞர் யுவதிகளுக்கான நிரந்தர தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் விடயம் காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் டி 7 பகுதியில் நேற்று முன்தினம் சிவனருள் தொழில் பயிற்சி ,உற்பத்தி நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு இளைஞர் யுவதிகள் மற்றும் பெண்களைத்தலைமையாகக்கொண்ட குடும்பங்களின் பெண்கள் நிரந்தர தொழில்வாய்ப்பின்றி காணப்படுகின்றனர்.

பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இந்த நிலைமைகள் எமக்கு பெரும் வேதனையளிக்கின்றன.

இந்த மாவட்டத்தில் உள்ள வேலையற்ற அனைவரும் அரச துறைக்குள் வேலைவாய்ப்பினைபெற்றுக்கொள்ள முடியாது. அது யதார்த்தத்துக்கு புறம்பானது. எனவேதான் கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் துறையின் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் மின்சாரம், வீதி, புகையிரத போக்குவரத்து உள்ளிட்ட பல உட்கட்டுமாணப் பணிகளை விரைவாக மேற்கொண்டும் நாம் எதிர்பார்த்த அளவுக்கு தனி யார் துறையின் முதலீடுகள் கிடைக்கப் பெறவில்லை.

தற்போது ஏற்பட்டுள்ள இயல்புச் [illegible] பலர் இங்கு முதலீடுகளை மேற்கொண்ட போதும் அவையும் எமது வேலைவாய்ப்பற்ற சமூகத்தின் தேவையினை பூர்த்தி செய்யும் அளவில் இல்லை.

இந்தநிலையில் வடக்கின் தொழில் துறையில் புலம்பெயர் ந்து ள்ள தமிழர்களின் முதலீடுகளை அதிகளவு எதிர்பார்க்கப்பட்டது.

முதலீடு செய்ய கூடிய தகுதியில் பல புலம் பெயர் தமிழர்கள் உள்ள போதும் அவர்கள் முதலீடுகளை மேற்கொள்ள கூடிய சூழல் இங்கு நிலவுகின்ற போதும் துரதிர்ஷ்டவசமாக அதுவும் நடை பெறவில்லை.

ஈழத் தமிழர்களுக்காக புலத்தில் கோசங்கள், போராட்டங்கள் என நடத்தும் அவர்கள் உண்மையிலேயே ஈழத்தமிழர்களின் முன்னேற்றத் திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அவர்கள் இங்கு பாதிக்கப் பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பல முன்னாள் போராளிகள் பெருமளவு இளைஞர் ,யுவதிகள், யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள் என ஒரு சமூகமே நிரந்தர தொழிலின்றி நாளாந்தம் தங்களின் வாழ்வாதாரத்திற்காக பெரும் துன்பங்களை சந்தித்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த வேண்டும். அது தனியே எம்போன்ற ஒரு சிலரினால் ஏற்படுத்திவிடக் கூடிய பணியுமல்ல.

தொழில் பயிற்சி மற்றும் உற்பத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

இதுபோன்ற தொழில்துறை முதலீடுகளை ஆரம்பிப்பதற்கு பலர் முன்வரவேண்டும். தனியார் துறையில் முதலீடுகளை மேற்கொள்கின்றவர்களுக்கு சமூக நலனிலும் அக்கறை இருக்கும் போதே சமூக முன்னேற்றம் ஏற்படும் எனவும் தெரிவித்தார். (அ-2)



அண்மையில் நடைபெற்ற கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் எழுதிய "மழலைத் தமிழ்மலர்" நூல் வெளியீடு அண்மையில் இடம் பெற்றபோது ஆசிரியை ஸ்ரீதேவி ஞானரட்ணம் நூலாசிரியரிடமிருந்து முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவு அரசு இலங்கையில் முதலீடுகளை ஏற்படுத்த வாய்ப்பு

## பிரதியமைச்சர் நியோமல்

(கொழும்பு)

**புதிய ஸ்திரமான அரசாங்கமொன்று மாலைதீவில் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் இரு நாடுகளுக்குமிடையிலான பல்தரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் வர்த்தக முதலீட்டுத்துறையில் இலங்கையில் மாலைதீவு முதலீட்டாளர்களை பெருமளவில் எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

மாலைதீவு வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இலங்கை - மாலைதீவு வர்த்தக சம்மேளன அமர்வு நேற்று முன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி அப்துல் யெமீன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதையொட்டி இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக முதலீட்டு உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலைதீவு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மொகமட் சயீட், இலங்கையின் வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோரின்பங்கேற்புடன்மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

பிரதியமைச்சர் நியோமல் பெரேரா மேலும் தெரிவிக்கையில்,

மாலைதீவிலிருந்து இலங்கைக்கு வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

மாலைதீவில் கடந்த சில வருடங்களாக ஸ்திரமற்ற ஒரு அரசாங்கமே இருந்து வந்துள்ளது. தற்போது புதிய பலமான அரசாங்கம் ஒன்று அங்கு உருவாகி உள்ளது. எமது தொடர்புகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாலைதீவின் பாரிய முதலீடுகளை எதிர்பார்க்க முடியும்.

சுற்றுலாத்துறை, விவசாயம், வர்த்தகம் உட்பட மாலைதீவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்தல் மற்றும் இலங்கையின் ஹோட்டல்களுக்கு அங்கிருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பில் இரு தரப்பு தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளோம்.

மாலைதீவுக்குள் பிரவேசிப்பதற்கான விசா நடைமுறைகள் பற்றி இந்த அமர்வில் கலந்துரையாடப்பட்டது. தொழில்நுட்பவியலாளர்களுக்கான விசாவைப் பெற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்துவதாக அந்நாட்டு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை மாலைதீவிற்கான சுற்றுலா விசா பெறுவதில் எந்த சிரமமும் இருக்காது. அதேபோன்று இலங்கைக்கான விசாவும் வழங்குவதில் சிரமங்கள் இல்லை.

எமது நாட்டில் மாலைதீவு நாட்டினர் 10 ஆயிரம் பேர் தற்போது உள்ளனர். இவர்களில் ஆயிரம் பேர் நீண்ட காலமாக இலங்கையில் வாழ்பவர்கள். சுற்றுலா, கல்வி மற்றும் வைத்தியசாலைக்கு சேவைகளை வழங்குவதற்காக இங்கு தங்கியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பரீட்சைக்கான மீட்டல் வகுப்பு

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 (2013/ 2014) இற்கான பரீட்சைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெற இருப்பதனால் இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புகள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்ழகத்தில் நடத்தப்படவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் கேட்டுள்ளார். (அ)

# சர்வதேசம் என்று செல்வதில் எந்தப் பயனும் ஏற்படாது

## பிரதியமைச்சர் கருணா தெரிவிப்பு



சர்வதேசம், சர்வதேசம் என்று செல்வதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எமது பிரச்சினையை எமக்குள் பேசித் தீர்த்துக் கொள்வதே சிறந்த முறையாக அமையும் என மீள்குடியேற்றத்துறை பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் குறித்த விவாதத்தின் போது பாராளுமன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சர்வதேசம் என்று சொல்லிக் கொண்டு போவதில் எப்பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். எமது பிரச்சினையை நாமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அங்கு ஒரு வீட்டைக் கூடக் கட்டுவதற்கு உதவி செய்யாத அவர் அங்குள்ள நிலைமை பற்றிக் கருத்து கூறுகின்றார்.

சில அரசியல்வாதிகள் அறியாமையின் காரணமாகவே சர்வதேசம் சர்வதேசம் என்று செல்கின்றனர்.

நாட்டில் நிலவும் அமைதிச் சூழலைக் குழப்பும் வகையிலேயே சில சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன.

குறிப்பாக பிரித்தானியா, ஈராக் போன்ற நாடுகளில் கால்வைத்து அங்குள்ள நிலைமையைக் குழப்பி விட்டுள்ளது.

எனினும் இலங்கையில் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் எவ்வித குழப்பமும் ஏற்படவில்லை. இச்சமாதான சூழலைக் குழப்பவே சிலர் முயற்சிக்கின்றனர்.

இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு இடமளிக்காது என்றார். (அ-2)



யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் புதுமுக மாணவர்கள், விருந்தினர்கள் ஆகியோர் அழைத்து வரப்படுவதனையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் பிரச்சினைகளை தீர்க்க அவகாசம் வேண்டும்

## ஐஸ்லாந்து ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

முரண்பாடு முடிவுற்றதை தொடர்ந்து இலங்கை தெளிவான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

அதனால் எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் மிக அவசியமானது. அதை விடுத்து காலவரையறை நிர்ணயிப்பது பயனளிக்காது என்று ஐஸ்லாந்து நாட்டின் ஜனாதிபதி ஒலாபுர் ரக்நர் கிறிம்சன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு ஒரு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை ஐஸ்லாந்து ஜனாதிபதி அபுதாபி நகரில் நேற்று முன்தினம் சந்தித்து இருபக்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இப்பேச்சுவார்த்தையின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களை தாம் இதற்கு முன்னர் இரு தடவைகள் சந்தித்ததை நினைவு கூர்ந்ததுடன், மீண்டும் அவரை சந்திக்கக் கிடைத்ததையிட்டு திருப்தியையும் அவர் வெளியிட்டார். (அ-2)

# பிரித்தானிய தமிழர் பேரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கும்

பிரித்தானிய தமிழர் பேரவை இந்த மாத இறுதியில் நடத்தும் மாநாட்டில் இலங்கை தமிழர்களுக்காக பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக மலேசியாவின் பினாங் மாநில முதலமைச்சர் பி. இராமசாமி தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டின் போது தாம் இலங்கையில் திட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்ற தலைப்பில் உரையாற்றப் போவதாக இராமசாமி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இலங்கை அரசாங்கம் தமிழர்களுடைய காணிகளை சுவீகரிப்பது தொடர்பாக தாம் முக்கியத்துவம் வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலைகளின் மூலம் தமிழ் சமூகத்தின் வரலாற்று காணிகள் பறிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந் நிலையில் இலங்கை தமிழர்களுக்காக தொடர்ந்தும் தாம் குரல் கொடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த ஆலயங்களை அமைக்கும் செயற்பாடு அத்துடன் உடல் ரீதியாக, கலாசார ரீதியாக மற்றும் பூகோள ரீதியாக தமிழர் களை பாதிப்படையும் செயல்கள் யாவும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்று இராமசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இரண்டு இனங்கள் இணைந்து வாழ்வது ஏற்புடையதல்ல.

எனவே தமிழர்களுக்கு சுதந்திரமான நாடு தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் இ- மெயில் சிவா ஐயாத்துரை சாதனை படைத்த தமிழன்

"இந்திய சித்த மருத்துவத்தின் மேன்மைகளை ஆராய்ச்சி செய்து, அதை கிழக்குலகின் பாரம்பரிய மருத்துவத்துடன் இணைத்து, மருத்துவ துறையில் புதிய புரட்சியை உருவாக்குவது தான் என் அடுத்த இலக்கு.

இன்றைய கார் பொரேட உலகம், தொழில்நுட்பங்களையும், அறிவியலையும், அறிவையும் மேலும் மேலும் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துகிறது. அது எல்லோருக்கும் கைவராத கலை என்பதை போல சித்தரிக்கிறது..."



முதலில் நான் கம்யூனிஸ்ட்
அதன் பிறகுதான் விஞ்ஞானி- இ-மெயிலைக் கண்டுபிடித்த சிவா ஐயாத்துரையுடனான செவ்வி-
ஆனந்தவிகடன்

இதுதான் முழுமையான இ-மெயில் சிஸ்டம். ராய் டாமில்சனை பொருத்தவரை அவர் இ-மெயிலில் இன்று பயன்படுத்தும் @ குறியீட்டை கண்டுபிடித்தார். அதற்கு மேல் அவரது பங்களிப்பு இதில் எதுவும் இல்லை!"

இடைப்பட்ட காலத்தில் என்ன செய்தீர்கள்?

"1993-ம் ஆண்டு நான் பி.ஹெச்.டி. ஆய்வில் ஈடுபட்டிருந்த போது, கிளிண்டன் அமெரிக்க அதிபராக இருந்தார். அப்போது வெள்ளை மாளிகைக்கு நாள் ஒன்றுக்கு 5,000 இ-மெயில்கள் வந்துகொண்டிருந்தன. அவற்றை நிர்வகிக்க நூற்றுக்கணக்கானவர்கள் வேலைக்கு இருந்தாலும், அது நாளுக்கு நாள் சிக்கலானதாக மாறிக்கொண்டிருந்தது. ஆகவே, அந்த மெயில்களை வகை வாரியாக பகுத்து பிரிக்கும் தானியங்கி தொழில்நுட்பத்தை கண்டறிவதற்கான போட்டி ஒன்றை அறிவித்தது வெள்ளை மாளிகை. பல்வேறு நிறுவனங்களும், தனிநபர்களுமாக 147 பேர் அதில் கலந்து கொண்டனர். இறுதியில் நான் கண்டறிந்த தொழில்நுட்பம் வெற்றி பெற்றது. அதற்கு நான் 'எக்கோ மெயில்' (EchoMail) என்று பெயரிட்டேன். இப்போதும் வெள்ளை மாளிகையில் இந்த தொழில் நுட்பம்தான் நடைமுறையில் இருக்கிறது.

பிறகு இந்த 'எக்கோமெயிலை' ஒரு நிறுவனமாக தொடங்கினேன். இன்று உலகின் மிக முக்கியமான நிறுவனங்கள் இதன் வாடிக்கையாளர்கள். இந்த நிறுவனத்தின் மதிப்பு 200 மில்லியன் டாலர். இதுபோக, வேறு மூன்று நிறுவனங்களையும் நடத்துகிறேன். கடந்த ஆண்டு, கிட்டத்தட்ட மூடப்படும் நிலையில் நஷ்டத்தில் இயங்கிய அமெரிக்க தபால் துறையை எனது புதிய இ-மெயிலிங் சிஸ்டம் மூலம் இலாபகரமாக மாற்றியபோது, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பில் இருந்து தப்பினார்கள். அமெரிக்க ஊடகங்கள் என்னைப்பற்றி பெரிதாக எழுதினார்கள். ஆனால், எனக்கு இந்தியாவில் பணிபுரியவே விருப்பம். ஆனால் அங்கு எனக்கு ஒரு கசப்பான அனுபவம் இருக்கிறது."

என்ன நடந்தது இந்தியாவில்? நீங்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதாக இணையப் பக்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

"ஆம், உண்மைதான். 2007-ம் ஆண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கான CSIR-Council of Scientific and Industrial Research துறையில் என்னை கூடுதல் செயலாளராக நியமித்தார் மன்மோகன்சிங். மூன்று ஆண்டுகள் அங்கு இருந்தேன். அந்த சி.எஸ்.ஐ.ஆர். நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட அமைப்பு. கடந்த 60 ஆண்டுகளில் அதில் உள்ளவர்கள் எதுவுமே செய்யவில்லை. எங்கும் லஞ்சம், ஊழல். அறிவியல் கண்டுபிடிப்புக்கான சூழல் கொஞ்சமும் இல்லை. இதைப்பற்றி 'கண்டுபிடிப்புகளுக்கு சுதந்திரம் வேண்டும்' (Innovation demands freedom) என்ற தலைப்பில் 47 பக்கத்துக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதை உலகின் முக்கியமான 4 ஆயிரம் விஞ்ஞானிகளுக்கு மெயில் அனுபபினேன். உலக அளவில் அது விவாதம் ஆனது.

உடனே இந்தியாவின் சட்டத்தை நான் மீறிவிட்டதாகச் சொல்லி திடீரென ஒருநாள் என் வீடு முடக்கப்பட்டது. என்னை வெளியேற்றினார்கள். நான் நேபாளம், கத்தார் வழியே அமெரிக்கா வந்தேன். 'சிவா ஐயாத்துரையை வெளியேற்றியது இந்தியா செய்த பெரிய தவறு' என்று பல விஞ்ஞானிகள் எழுதினார்கள். அதைப்பற்றி இந்தியா கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இப்போதும் அங்கு சூழல் மாறிவிடவில்லை. அங்கிருக்கும் நேர்மையற்ற அரசியல் சூழலில் அறிவியல் ஒருபோதும் வளராது"

இ-மெயிலை கண்டுபிடித்தது நீங்கள்தான் என்பதை அவ்வளவு சுலபத்தில் யாரும் ஏற்றுக்கொள்ளாதது ஏன்?

"ஏனெனில் நான் கறுப்பு நிறத் தோல் உடையவன். புலம்பெயர்ந்து வந்த இந்தியன். சிறுபான்மை தமிழன். 'நூவர்க்' என்னும் சிறிய ஊரில் வசித்தவன். முக்கியமாக 14 வயது சிறுவன். இவற்றை தவிர வேறு என்ன காரணத்தை சொல்ல முடியும்? 50 ஆயிரம் வரிகளை கொண்ட ஒரிஜினல் புரோகிராமிங் கோட், ஒரு வெள்ளைத்தோல் உடையவரிடம் இருந்தால் இந்த சர்ச்சைகளுக்கு வாய்ப்பே இல்லை.

அறிவியல் கண்டுபிடிப்புகளை ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும், எம்.ஐ.டி. போன்ற புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களிலும்தான் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். அதனால்தான் நான் எம்.ஐ.டி-யில் இருந்தபோது கண்டுபிடித்த 'எக்கோ மெயிலை' கொண்டாடும் இவர்கள், நியூஜெர்சி மருத்துவமனையில் ஆராய்ச்சி உதவியாளராக இருந்த போது கண்டுபிடித்த இ-மெயிலை புறக்கணிக்கிறார்கள். இந்தியாவில் பிராமணர், பிராமணர் அல்லாதோர் பாகுபாடு இருப்பதை போல, அமெரிக்காவில் தோலின் நிறத்திலும், சிறுபான்மை-பெரும்பான்மை என்ற அளவிலும் பாகுபாடு இருக்கிறது. தெளிவாக எழுதிக் கொள்ளுங்கள், தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வந்த கறுப்பு நிறத் தோல் உடைய 14 வயது தமிழ் சிறுவன் இ-மெயிலை கண்டு பிடித்தான்.

இன்னொரு முக்கியமான கோணத்திலும் இதை நீங்கள் பார்க்க வேண்டும். நான் அடிக்கடி பயன்படுத்தும் 'மோட்டோ' வாக்கியம், 'கண்டுபிடிப்பு என்பதை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், யாராலும் செய்ய முடியும்' (Innovation Any Time- Any Place by Anybody). அறிவும், அறிவியலும் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று நினைப்பவர்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அறிவியல் கண்டுபிடிப்புகளை வெறுமனே பணம் ஈட்டும் சந்தையாக பார்க்கும் பன்னாட்டு நிறுவனங்கள் என்னை தனிமைப்படுத்த விரும்புகின்றன. ஆனால், நான் இப்போதும் சொல்கிறேன், என்னிடம் பேட்டி எடுக்கும் நீங்களும், இதை படிக்கப்போகும் தமிழ் வாசகர்களும் அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்த முடியும். அதற்கான சூழலை உருவாக்கித் தர வேண்டும். வரப்போகும் காலம் மிக அபாயகரமானது. வேலை இல்லாத் திண்டாட்டம் மிக மோசமாக இருக்கும். மில்லியன் கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அது அறிவியலால் மட்டும்தான் சாத்தியமாகும்!"

உங்கள் பேச்சை வைத்து கேட்கிறேன். நீங்கள் சயிண்டிஸ்டா, கம்யூனிஸ்டா?

"நான் சயின்டிஸ்ட் மட்டுமல்ல, கம்யூனிஸ்ட்டும் கூட. எம்.ஐ.டி.யில் படிக்கும்போது மாணவர் சங்கத்தில் இணைந்து ஏராளமான போராட்டங்களை நடத்தியிருக்கிறேன். தென்னாப்பிரிக்காவில் நடந்த- நிறவெறி நடவடிக்கைகளைக் கண்டித்து அந்த நாட்டு கொடியை எரித்தேன். பல்கலைக்கழகத்தின் உணவு உபசரிப்புப் பணியாளர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுவதை கண்டித்து போராடி வெற்றி பெற்றோம். இலங்கையில் தமிழர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில்- அப்போது அதிபராக இருந்த பிரேமதாசா அமெரிக்கா வந்தார். அவரை வெளியேறச் சொல்லி போராடினோம். 'த ஸ்டூடண்ட்' என்ற பெயரில் நான்கு ஆண்டுகள் பத்திரிகை நடத்தினேன். கல்லூரி வளாகத்தில் நானும், என் சகாக்களும் வலிமை வாய்ந்த சிறுபான்மை சக்திகளாக இருந்தோம். பி.ஹெச்.டி. செய்துகொண்டிருந்த போது, ஈராக் நாட்டுக்குள் படைகளை அனுப்பிய அமெரிக்க அரசுக்கு எதிராக தன்னந்தனியாக போராடினேன். அதனால் நான் அடிப்படையில் கம்யூனிஸ்ட். பிறகு தான் சயின்டிஸ்ட்.

**இன்று தொழில்நுட்பத்தையும், அறிவியல் வளர்ச்சியையும் பெரும் நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன.** ஃபேஸ்புக், ட்விட்டர், கூகுள் போன்ற இணைய நிறுவனங்களும், செல்போன் கம்பெனிகளும் மக்களை அன்றாடம் கண்காணிக்கின்றன. சந்தர்ப்பம் வரும்போது மக்களுக்கு எதிராக கை கோத்துக் கொள்கின்றனர். சமீபத்தில் எகிப்தில் நடந்த மக்கள் புரட்சியை, எஸ்.எம்.எஸ் அனுப்புவதை தடைசெய்து ஒடுக்கியதே இதற்கு உதாரணம்"

இ-மெயிலை கண்டுபிடித்தவர் என்ற வகையில் உங்களுக்கு வருவாய் வருகிறதா?

"நான் இ-மெயிலுக்கு 'காப்பிரைட்ஸ்'தான் வாங்கினேன். 'பேடன்ட ரைட்ஸ்' அல்ல. காப்பிரைட்ஸ் படி, ராயல்டி தொகை வராது. 1995-ம் ஆண்டுதான் சாஃப்ட்வேருக்கு பேடன்ட் ரைட்ஸ் வாங்கும் சட்டம் வந்தது. அதன்பிறகு நான் முயற்சிக்கவில்லை. ஏனெனில் நான் பணத்தை எதிர்பார்க்கவில்லை. என் நிறுவனங்கள் வழியே ஏராளமான பணம் எனக்குக் கிடைக்கிறது"

உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

"எனது முழு வாழ்க்கையும் அறிவியலில்தான் செலவாகும், அதில் சந்தேகம் இல்லை. அமெரிக்காவிலும், இந்தியாவிலுமாக மாறி, மாறி இயங்கவே விரும்புகிறேன். இந்திய சித்த மருத்துவத்தின் மேன்மைகளை ஆராய்ச்சி செய்து, அதை கிழக்குலகின் பாரம்பரிய மருத்துவத்துடன் இணைத்து, மருத்துவ துறையில் புதிய புரட்சியை உருவாக்குவதுதான் என் அடுத்த இலக்கு.

இன்றைய கார்பொரேட் உலகம், தொழில் நுட்பங்களையும், அறிவியலையும், அறிவையும் மேலும் மேலும் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துகிறது. அது எல்லோருக்கும் கைவராத கலை என்பதை போல சித்தரிக்கிறது. ஆனால் உலகத்தில் ஒரே ஒரு சிவா மட்டுமில்ல்ல்.. ஒரே ஒரு சாம்ஸ்கி மட்டுமில்லை. உலகம் முழுக்க ஆயிரமாயிரம் சிவாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் வெளியே கொண்டு வர வேண்டும்!"

ஆனந்தவிகடனிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை குற்றவாளிகளின் மரண தண்டனை இரத்தாகும்

## நம்பிக்கை என்கிறார்- வைகோ

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரினது மரண தண்டனையும் உறுதியாக இரத்து செய்யப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நீதியரசர் சதாசிவம், நீதியரசர்கள் ரஞ்சன் கோகோய், சிவ் கீர்த்திசிங் ஆகிய மூவர் அமர்வு, 15 பேர்களுக்கு விதிக்கப்பட்டு இருந்த தூக்குத் தண்டனையை இரத்து செய்து, ஆயுள் தண்டனையாக அறிவித்து இருக்கின்ற தீர்ப்பு இந்திய நீதிமன்ற வரலாற்றில் பொன்னேடு ஆகும்.

வீரப்பன் கூட்டாளிகள் எனக் குற்றம் சாட்டப்பட்ட பிலவேந்திரன், சைமன், ஞானப்பிரகாசம், மீசை மாதையன் ஆகியோருக்கு 2004 இல் உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது.

குடியரசுத் தலைவருக்கு அவர்கள் தந்த கருணைமனு ஒன்பது ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டு, 2013 இல் நிராகரிக்கப்பட்டது. அவர்கள் தூக்கில் இடப்பட இருந்த நிலையில், தூக்குத்தண்டனையை இரத்துச் செய்யக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர் காலின் கொன்சால்வ்ஸ், மும்பை வழக்கறிஞர் யுக்மொகித் சௌத்ரி ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் வாதாடினர். இந்த நால்வரும் உண்மையில் நிரபராதிகள் ஆவார்கள்.

இன்று உச்சநீதிமன்றத்தில் இப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 15 பேர் தொடுத்த வழக்கில், 13 பேருக்கு கருணை மனு மீதான முடிவை அறிவிப்பதில் ஏற்பட்ட தாமதத்தைக் காரணம் காட்டி தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. உடல்நிலை கெட்டு, மனநலம் பாதிக்கப்பட்ட காரணம் காட்டி மகன்லால், சுந்தர்சிங் ஆகிய இருவரின் தூக்குத்தண்டனையும் இரத்து ஆகியுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரும் திருப்பெரும்புதூர் சம்பவத்தில் துளி அளவும் தொடர்பு இல்லாத நிரபராதிகள் ஆவர்.

மரண தண்டனையை எதிர்நோக்கியவாறு 23 ஆண்டுகளாகச் சிறைக் கொட்டடியில் மரணத்தை விடக்கொடிய சித்திரவதையை அனுபவித்து வருகிறார்கள்.



11 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களுடைய கருணை மனுக்கள் கிடப்பில் போடப்பட்டன. அதன் பின்னர் அவர்களது கருணை மனுக்களைக் குடியரசுத் தலைவர் நிராகரித்து அவர்களைத் தூக்கில் போடுவதற்கு 2011 ஆம் ஆண்டு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது.

இதன்பின்னர் 2011 ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி வாதாடிய போது, உயர்நீதிமன்றம் தூக்குத் தண்டனைக்கு இடைக்காலத் தடை விதித்தது.

இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் விசாரிக்க வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சியினர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் மீது வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

மூன்று தமிழரின் தூக்குத் தண்டனை குறித்த வழக்கு, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வில் எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

இன்றைய தீர்ப்பின் அடிப்படையில், அவர்களது மரண தண்டனையும் உறுதியாக இரத்து செய்யப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேவேந்திரநாத் புல்லரின் தூக்குத் தண்டனையும் இரத்து ஆகும் வாய்ப்புள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பு, இனி எதிர்காலத்தில் தூக்குத் தண்டனை இந்தியாவில் அறவே அகற்றப்படுவதற்கான வழியைத் திறந்துள்ளது.

தமிழகத்திலும், உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் கவலை அகலும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பை துயர் போக்கும் மாமருந்தாக வரவேற்கிறேன்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார். (அ-2)

## மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்த சர்வாதிகார ஆட்சி பின்பற்றப்படுகிறது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சி முறைமையை பின்பற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அடெல்ப் ஹிட்லரின் அடக்குமுறைக் கொள்கைகளையே இந்த அரசாங்கம் பின்பற்றி வருகின்றது என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,


கசினோ, போதைப் பொருள் வர்த்தகம் போன்ற சமூக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி பாரியளவில் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டிக்கும் வகையில் இந்த போராட்டமும் பேரணியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஹைட் பார்க் மைதானத்தில் பிரதான கூட்டம் நடைபெறவுள்ளது.

கொழும்பின் மூன்று பகுதிகளிலிருந்து பேரணியாக சென்று ஹைட் பார்க் மைதானத்தில் கூட்டம் நடைபெறவுள்ளது. நாட்டு மக்களின் ஜனநாயகத்தை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)











கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவியொருவருக்கு திருமதி குருகுலராஜா பரிசில் வழங்குவதையும் கல்லூரி அதிபர் எம் கனகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வியமைச்சர் குருகுலராஜாவுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- தும்பளை செய்தியாளர்)

## புகைத்தல் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டில் புகைத்தல் பாவனையாளர்களின் எண் ணிக்கை 9 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டில் தொற்றாத நோய்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் காரணமாக இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொற்றாத நோய்கள் தொடர்பான அறிக்கையை அண்மையில வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இந்த கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, அமைச்சு பதவியை துறந்த தினத்தில் தாம் கவிதைகளை பாடி வாழ்க்கை நடத்தப் போவதாக சுகாதாரத்துறை அமைசசர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் சிங்கள கவிதை வரிகளையும் பாடிக்காட்டினார்.

எதிர்காலத்தில் வயோதிபத்தின் போது தொழில் ரீதியாக கவிதை பாடுவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, அரச சேவையில் 60 வயதின் பின்னர் ஓய்வூதியம் பெறுவதை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## இலங்கைக்கு கப்பல் விற்கப்படுவதை தடுக்கக்கோரி நீதிமன்றில் வழக்கு

இலங்கைக்கு போர் கப்பல்கள் விற்க மத்திய அரசுக்கு தடை விதிக்கக் கோரி, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கறிஞர் ஸ்டாலின் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுதாகர், வேலுமணி ஆகியோர் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இலங்கைக்கான மத்திய வெளியுறவுத்துறை இணை செயலாளர் மயானக் ஜோஷி பதில் மனுத்தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது,

கோவாவிலுள்ள கப்பல் கட்டும் முனையம் சார்பில் இலங்கை அரசுக்கு 2 ரோந்துக் கப்பல்களை வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

கப்பல்கள் ஒவ்வொன்றும் 105.7 மீற்றர் நீளம் கொண்டதாகவும் 12 முதல் 14 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியதாகவும் இருக்கும்.

இதற்கு எக்சிம் வங்கி நிதியுதவி அளிக்கிறது.

இவை போர்க்கப்பல்கள் அல்ல. இவற்றில் ஆயுதங்கள் கிடையாது. தற்காப்புக்குத் தேவையான ஆயுதங்கள் மட்டுமே இருக்கும். இலங்கைக் கடல் பாதுகாப்புக் காக இந்த கப்பல்கள் பயன்படுத்த ப்படும்.

100 மில்லியன் டொலர் மதிப்பிலான இந்த ஒப்பந்தம் காரணமாக சர்வதேச அளவில் இந்தியாவின் கௌரவம் மேலும் உயரும்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்படுவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

நடுக்கடலில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதாக தகவல்கள் கூறப்பட்ட போதெல்லாம் மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசை தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியது.

இந்திய கடல் பகுதிக்குள் புகுந்து ஒருபோதும் மீனவர்களைத் தாக்கவில்லை என இலங்கை கடற்படை கூறியது.

இருப்பினும், இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடத்த வேண்டும் என மத்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

இதன் பயனாக தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் பகுதியில் கடற்படைத் தாக்குதல் நடத்தாது என 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை அரசு கொள்கை வகுத்து அறிவித்தது.

அதன் பின்னர் தமிழக மீனவர்கள் யாரும் இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்படவில்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயன்முறையில் உலகமயமாக்கல் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள்

### அறிமுகம்

புதிய கல்விச் சிந்தனையின் படி நாட்டைக் கட்டியெழுப்பும் கைங்கரியத்தில் தோள் கொடுத்து அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் நாட்டுக்காக செயற்படுவதற்கு வேண்டிய அறிவையும் திறனையும் மனப்பாங்குகளையும் கல்வி முறையினூடாக மாணவர்களுக்கு வழங்குவதே கல்வியாகும்.

உலக நாடுகளையும் அவற்றின் மக்களையும் பொருளாதார, தொழில் நுட்ப, கல்வி கலாசார, அறிவியல் தொடர்புகளுக்கூடாக ஒன்றில் ஒன்று தங்கியிருத்தல், ஒருங்கிணைத்தல், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையை உணர்த்தல் ஆகிய செயன்முறை உலக மயமாக்கலாகும்.

உலகமயமாக்கல் செயன்முறையானது குறித்த நாடு, உலகம் முழுவதையும் தனது பொருளாதார , கல்வி செயலாற்றுகைக்கான சந்தையாக பயன்படுத்த முடியும் என வலியுறுத்துகின்றது.

உலக நாடுகள் எல்லாம் எல்லா நாடுகளுக்குமான பொதுவான சந்தை என்பதை விபரிக்கின்றது.

### உலகமயமாக்கலின் பரிமாணங்கள்

✠ உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் கல்வி சார் பரிமாற்றங்களை அதிகரித்தல்

✠ உலக நாடுகள் அனைத்திலும் போட்டி என்பதற்குப் பதிலாக ஒத்துழைப்பு என்ற புதிய திசையிலான கல்விச் சிந்தனையை ஊக்குவித்தல்.

✠ வெளிநாட்டு சர்வதேச முதலீடுகள் வந்தடைதல். இம்முதலீடுகள் கல்வி வளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கும் உதவுதல்.

✠ உலகமயமாகுதலில் பூகோளக் கிரகம் Global Village உருவாகும்போது வளர்முக நாடுகளில் உள்ள பின்தங்கிய சமூக கல்வி நிலைமைகளை ஒழித்துவிடுதல்.

✠ உலக நாடுகளில் வேகமாக வளர்ந்து வரும் அதி நவீன தொழில்நுட்ப அறிவையும் கைத்தொழில் அறிவையும் உலகெங்கும் பரப்புதல்.

✠ உலகத்திலுள்ள அனைத்து சமூகங்களினதும் கல்விப் பண்பாட்டினதும் தொடர்ச்சியான ஒன்றிணைப்பை அதிகரிக்கச் செய்தல்.

✠ உலக நாடுகள் அனைத்திலும் பல பொதுவான நெருக்கடிகள் முனைப்படைந்திருப்பதால் நாடுகள் ஒருங்கிணைந்து அவற்றைத் தீர்த்தல்.




### கல்வியில் உலகமயமாக்கலின் நன்மைகள்

கல்வி நோக்கில் உலகமயமாக்கல் உலகத்தை ஒரு குடும்பமாக்குகின்றது. முன்னர் உள்ளதைவிட கூடுதலான கருத்துப் பரிமாற்றங்கள், அறிவுப் பரிமாற்றங்களை மிக நெருக்கமாக இடம்பெறச் செய்கின்றது.

உலகினது அனைத்துப் பண்பாடு, அனைத்து சமூகங்களுக்கிடையே தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுகின்றது. செயற்கைக்கோள் அடிப்படையிலான விரைவான தகவல் பரிமாற்றம் உலகை ஒரு கிராமமாக சுருக்கி விடுகின்றது.

உலக நாடுகளுக்கிடையே நிகழும் கல்விச் சுற்றுலாக்கள், அறிவாளிகளின் பரிமாற்றம் , விஞ்ஞானிகளின் பரிமாற்றம், மாணவர்களின் பரிமாற்றம் என்பன கல்வி முன்னேற்றத்துக்கான நேரான செயற்பாடுகளாகும்.

உலக சமூகத்துக்கும் கைத் தொழில்துறையின் போட்டிக்கும் முகங்கொடுக்கக்கூடிய அதிக தரமுடைய மாணவர்களை உருவாக்க உதவும்.

உலகமயமாக்கல் புதிய கண்டுபிடிப்புக்களையும் தொழில்நுட்பங்களையும் ஆராய்ச்சி முறைகளையும் உலக மக்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கு உதவும்.

உலகமயமாக்கல் ஒருங்கிணைக்கின்ற கல்விசார் நிறுவனங்களுடைய பணிகள் விரிவாக்கப்படுகின்றமையும் புதிய கல்விசார் நிறுவனங்கள் உருவாக்கப்படுவதற்கும் உதவுகின்றது.

கல்வித் தொழில் நுட்பத்தில் விரைந்த வளர்ச்சி, முன்னேற்றங்கள் இடம் பெறுதல் கல்வி வாயிலாக மனித உரிமைகளை அறிதலும் பாதுகாத்தலும் சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்தலுக்கும் உதவும்.

பன்முகப் பண்பாடுகளையும் அறிவு பூர்வமாக உணர்தலும் மதிப்பளித்தலும் என்ற செயற்பாடுகளுக்கு கல்வியையும் கலைத் திட்டத்தையும் கருவியாக்கும் செயற்பாட்டுக்கு உலகமயமாக்கல் உதவும்.

### உலகமயமாக்கல் கல்வி, கலைத்திட்டத்தில் ஏற்படுத்தி வரும் மாற்றங்கள்

உலகில் ஏற்பட்டுள்ள தீவிர போட்டிக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு கலைத்திட்டம் இன்று இயக்கி விடப்பட்டுள்ளது. கலைத் திட்டத்தில் கல்வித் தொழில் நுட்பம் முன்னரிலும் கூடுதலாக ஊடுருவியுள்ளது. கல்வி நிறுவனங்கள் ஓரளவு மறைவின்மையையும் வெளிப்படையான தன்மையையும் காட்டுகின்றன.

பன்முகப் பண்பாட்டு விழிப்புணர்ச்சி பாடத்திட்டத்தில் நுழைந்துள்ளன. கல்விக்கும் தொடர்பு சாதனங்களுக்குமிடையான தொடர்பு அதிகரித்துள்ளது. கல்வி நுகர்வோர் புத்திசாதுரியமாக கல்வி நுகர்வதற்கான அறிவை வழங்கல் எனும் எதிர்பார்ப்புகள் நிறைவடைகின்றன.

உலக நாடுகளின் பொருளாதார,கலாசார, அரசியல், கல்வி மற்றும் சித்தாந்த அமைப்புகளில் ஒரு வகையான மேற்கு நாட்டுப் பாணியிலான ஒருமைப்பாடு ஏற்பட்டு வருவது உலகமயமாக்கலின் ஒரு முக்கிய விளைவு என்பதை மனங்கொள்ள வேண்டும்.

### உலகமயமாக்கலால் வளர்முக நாடுகளில் கல்வி, பண்பாட்டுப் பாரம்பரியங்களில் ஏற்பட்டு வரும் எதிர்மறைத் தாக்கங்கள்

பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழக கல்வி முடித்தவர்களிடையே வேலையின்மைப் போக்கு அதிகரித்து வருகின்றது. தொழில் கொள்வோரின் தொழிற் பாதுகாப்பு குறைந்து வருகின்றது.

பாரம்பரியத்திற்குரிய விவசாய முறைகள் நலிவு பெறுகின்றன. உற்பத்தித் திறனைவிட நுகர்வுத் திறன்களே மேலோங்குகின்றன. உலகளாவிய சுரண்டலுக்கு வலுவான தளம் அமைக்கப்படுகின்றது. சுற்றுப் புறச் சூழல் விரைவாக மாசடைந்து வருகின்றது.

வளர்முக நாடுகளில் உள்ள பாரம்பரியமான கல்வி நிறுவனங்கள் வலுக்குன்றி நலிவடைகின்றன. சமூக உதவித் திட்டங்களிலும் நிவாரணங்களிலும் இலவசக் கல்வித் திட்டங்களிலும் உதைப்பு ஏற்படுத்தப்படுகிறது. தன்னிறைவு கொண்ட நாடுகளின் சமநிலையைக் குலைத்து விடுகிறது.

மனித உடல் நலத்தைப் பாதிக்கும் புதிய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல்.

### உலகமயமாக்கல் இலங்கைக் கல்விச் செயன்முறையில் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள்

உலக மயமாக்கல் என்பது ஒரு வகையில் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதார முறையின் தோற்றத்தைக் கருதும். இத்தகைய பொருளாதார முறையினுள் இணைந்து கொள்ள சகலரும் கல்வி பெற வேண்டிய அவசிய நிலை ஒன்று உருவாகியுள்ளது.

இலங்கையின் கல்விச் செயன்முறையிலும் உலகமயமாக்கல் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையில் உருவாக்கப்பட்டு வரும் சர்வதேசப் பாடசாலைகளில் இதன் நேரடியான தெறிப்பைக் காணலாம். மேலை நாடுகளில் பின்பற்றும் கலைத்திட்ட வடிமைப்புக்கள், பாட உள்ளடக்கம், பாட நூலாக்கத்தின் நுழைவு என்பன இடம் பெற்றுள்ளன. உலக சந்தையில் காணப்படும் ஒரு சில உத்தியோக வகுப்புக்குரிய நிலையைக் கொண்டு முழுக் கல்வி முறையும் முடக்கி விடப்பட்டு சமநிலைக் குலைவு ஏற்படுத்தப்படுகிறது.

இலங்கையில் உலகமயமாக்கல் என்பது ஆங்கிலக் கல்விக்குத் தரப்படும் முக்கியத்துவம் மீண்டும் மெருகூட்டும் நிகழ்வாகும். இது வசதியுடையவர்களுக்கு கல்வி சார் முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உதவுகின்றது. இது வசதியுடையவர்களுக்கும் வசதியற்றவர்களுக்கும் இடையே இடைவெளியை மேலும் விரிவாக்கும்.

இலங்கையில் உலகமயமாக்கலின் விளைவாக இலவசக் கல்வி திட்டத்திற்கு ஒருவித பயமுறுத்தல் ஏற்பட்டு வருகிறது. அறிவு ஓர் உற்பத்தி பண்டமாக மாறும் போது இலவசம் என்பது நலிவடையும் போக்கையே வலுவடையச் செய்யும்.

### முடிவுரை

உலக மயமாக்கல் என்பது உலக நாடுகளில் கல்வியில் புதிய தோற்றப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. கல்வி முறையில் ஏற்படும் பாதகமான விளைவுகளில் இருந்து தப்புவதற்கு சிறந்த கல்வி முறைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதன் மூலம் தப்பிக் கொள்ளலம்.

வளர்முக சிறிய நாடுகள் அனுகூலமான திருப்திகரமான பாதையை தமக்கென செய்யும் ஆற்றலின்றி தடுமாறுகின்றன. உலகமயமாக்கலில் உலக நாடுகள் கல்வியில் நேர்த் தாக்கத்தையும் எதிர்த்தாக்கத்தையும் மறுதலித்துக் கொண்டிருக்கின்றன. எனினும் அது ஓர் உலக அலையாக இருப்பதால் அதன் தாக்கத்தை எந்த நாடும் அனுபவிக்காது இருக்க முடியாது.

**இராமநாதன் ஈஸ்வரதாஸன்**
**ப/இந்துக் கல்லூரி,**
**கொழும்பு-04**

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி விபர அடிப்படையில் மட்டுமே பொருளாதாரம் மேம்பட்டுள்ளது

## ஹந்துனெத்தி எம்.பி.தெரிவிப்பு

புள்ளிவிபர அடிப்படையில் மட்டுமே நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச் சியடையச் செய்துள்ளார். இதனால் கொள்கை வகுப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.


கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விவசாயிகளின் ஓய்வூதியம் இன்னமும் வழங்கப்படவில்லை. இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுவோருக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை. நாட்டின் அபிவிருத்தி வெறும் புள்ளி விபரத் தகவல்களாக இருப்பதில் மக்களுக்கு பயனில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கொலை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்

பிரித்தானிய பிரஜையான குர்ரம் ஷேக்கின் கொலை தொடர்பில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தங்காலை பிரதேச சபையின் தலைவர் சம்பத் விதான பத்திரன கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பின் புறநகர் கோட்டே பகுதியில் அவர் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சம்பத் விதான பத்திரனவுக்கு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் அவர் அன்று சமுகமளிக்காமை காரணமாக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. இந்நிலையிலேயே சம்பத் விதான பத்திரன கைது செய்யப்பட்டுள் ளார். இக்கொலை கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### வைரமுத்து சண்முகம்

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பரந்தன் குமரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சண்முகம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று கோரக் கண்கட்டு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய் யப்படும்.



### திருமதி. திலகவதி உலகநாதன்

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி உலகநாதன் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று மாலை 4மணிக்கு நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி நடராசா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சுழிபுரம் மேற்கில் வசித்தவருமாகிய சின்னத் தம்பி நடராசா 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நேற்றுநடைபெற்றது.



### திருமதி.சண்முகநாதன் அன்னலட்சுமி

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் அன்னலட்சுமி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

# காணி வழங்கல் விசாரணையில் தமிழ் மற்றும் சிங்கள குடும்பங்களுக்கு அழைப்பில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் காணி விசாரணை நடைபெறுவதாக அறிந்து அங்கு பதிவுகளை மேற்கொள்ள சென்ற தமிழ் மக்கள் திருப்பி அனுப் பப்பட்டுள்ளனர்.

இக்காணி பதிவுகள் நேற்று முன் தினமும் நேற்றும் காணியற்ற முஸ் லிம் மக்களுக்கு மட்டுமே பிரத்தியே கமாக அறிவிக்கப்பட்டு பதிவுகள் நடைபெறுவதாகவும் அங்கு தெரி விக்கப்ப்ட்டுள்ளது.

காணிக்காக விண்ணப்பித்த தமிழ், சிங்கள குடும்பங்கள் 2 ஆயி ரத்து 622 குடும்பங்களுக்கு இது வரை காணி விசாரணை நடத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது.

இவ்விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன் கரைதுறைப்பற்று பிரதேச செய லாளர் தி.திரேஸ்குமாரிடம் கேட்ட போது,

27.02.2013 அன்று 3ஆயி ரத்து 153 தமிழ், முஸ்லிம், சிங்கள குடும்பங்கள் காணியற்றவர்களென அரச அதிபரூடாக காணி ஆணையா ளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள் ளது. இதில் முஸ்லிம் குடும்பங்கள் ஆயிரத்து 455 மற்றும் தமிழ், சிங் கள குடும்பங்கள் ஆயிரத்து 698 ஆகும். எனவும் 20.05.2013 இல் மேற்கொள்ளப்பட்ட காணி இல்லாத வர் பதிவின் போது தமிழ்,முஸ்லிம், சிங்கள குடும்பங்கள் 4 ஆயிரத்து 77 குடும்பங்கள் இனங்காணப்பட் டுள்ளதாகவும் இதில் தமிழ், சிங்கள குடும்பங்கள் 2 ஆயிரத்து 622 ஆகவும் முஸ்லிம் குடும்பங்கள் ஆயிரத்து 455 குடும்பங்களாக வும் இனங்காணப்பட்டுள்ளன.

காணி விண்ணப்பித்தவர்களில் ஆயிரத்து 455 முஸ்லிம் குடும்பங் களில் காணி பெறதகுதியானவர் களை தெரிவு செய்வதற்கு 2013 .07. 15,16,18,19,23 ஆம் திகதிகளில் காணி விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணையில் ஆயி ரத்து 124 முஸ்லிம் குடும்பங்கள் மட்டும் சமுகமளித்திருந்தனர். சமு கமளித்திருந்தவர்களில் 594 குடும் பங்கள் தகுதியுடையவர்கள் எனவும் சமுகமளித்தவர்களில் 530 முஸ் லிம் குடும்பங்கள் தகுதியற்றவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது.


தகுதியற்றவர்கள் எனத் தீர்மானிக் கப்பட்ட 530 முஸ்லிம் குடும்பங் களையும் சமுகமளிக்காத 331 முஸ் லிம் குடும்பங்களையும் கடந்த 20,21 ஆம் திகதிகளில் முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிர தேச செயலகத்தில் காணி விசா ரணை நடைபெறுவதாகவும் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவித்தார். (அ)

# உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது

வடக்கு கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த் தப்பட வேண்டும் என்பது உட்பட ஆறு அம்சக் கோரிக்கையை முன் வைத்து அனைத்து அடக்கு முறை களுக்கும் எதிரான அமைப் பின் தலைவர் மு.தம்பிராசா மேற் கொண்டு இருந்த உண்ணாவிரத போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

யாழ். மாவட்ட செயலகம் முன் பாக கடந்த 16 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர் மதியத்துடன் முடித் துக் கொண்டுள்ளார்.

கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிறேமச் சந்திரன் மற்றும் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர்களும்மாகாண சபை உறுப்பினர்களுமான சிவாஜி லிங்கம் மற்றும் சித்தார்த்தன் ஆகி யோர் இணைந்து மென் பானம் வழங்கி போராட்டத் தினை முடித்து வைத்தனர். (அ)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அவர்கள் கடந்த 20 ஆம் திகதி வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அவர்களை நாவலர் வீதியிலுள்ள மீன்பிடி போக்குவரத்து அமைச்சு காரியாலயத்தில் சந்தித்து வடக்கு மாகாணத்தின் எதிர்கால திட்டங்கள், அபிவிருத்திகள் தொடர்பிலும் போக்குவரத்து மற்றும் வைத்திய வசதிகள் தொடர் பிலும் கலந்துரையாடினர். (படம்:-எஸ்.ஆர்.கரன்)

# வடக்கு மீன்பிடி அமைச்சர் திடீர்விஜயம்

(பூந்தோட்டம்)

வவுனியாவிலுள்ள வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ் வரன் நேற்று முன்தினம் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

அவ்வேளை அமைச்சின் செய லாளர் சு. வரதீஸ்வரன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களை சந்தித்திருந்த அவர், கிராமங்களின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியி ருந்தார்.

இதேவேளை வடமாகாணத் தின் கிராமிய மட்ட அபிவிருத்திகள் தொடர்பாக சந்திப்புக்களை மேற் கொண்டு திட்டங்களை வகுக்கவுள்ள தாகவும் உத்தியோகத்தர்கள் மத்தி யில் தெரிவித்த அவர், கிராம மட்ட அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் பங்களிப்பினை பூரணமாக வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-9-266)

# மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் என்னை அடக்க முயற்சிக்கின்றது

## மங்கள எம்.பி.தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் மற் றும் அதன் பின்னர் நடத்தப்படவுள்ள ஜனா திபதித் தேர்தல் போன்றவற்றிற்கு தயாராகும் வகையில் மகிந்த ராஜ பக்ஷ அரசாங்கம் தன்னை அடக்க முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசி யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

அவ் வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

2007 ஆம் ஆண்டு ஜனாதிப தியுடன் முரண்பட்ட என்னை அவ மதிப்புக்கு உட்படுத்த முயற்சித்து தோல்வியடைந்துள்ள அரசாங்கம், பல காலமாக பயன்படுத்தப்படாமல் இருக்கும் குற்றவியல் சட்டத்தின் பழைய அத்தியாயத்தை பயன்படுத்தி அடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் எனது வீட்டிற்குள் புகுந்து சில மதுபான போத்தல்களை கொள்ளையிட்ட பொலிஸார் முன் னிலையில் குற்றத்தை ஒப்புக் கொண்ட சந்தேக நபர் தற்பொழுது அரச மற் றும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங் கும் ஊடகங்களின் நட்சத்திரமாக மாறியுள்ளார்.

எனக்கு எதிராக குற்றவியல் சட் டத்தின் 365A அத்தியாயத்தில் இருக் கும் சட்டத்தை அமுல்படுத்தும் சூழ்ச் சியின் கீழ் சந்தேக நபரை கமராக்க ளுக்கு முன்னால் நிறுத்தி எனக்கு எதிராக பொய்யானதும் அடிப்படை யற்றதுமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

எனது தனிப்பட்ட வாழ்க்கை இர கசியமானது என்ற போதும் அதனை நான் எப்போதும் இரகசியமான முறை யில் வைத்திருக்கவில்லை. கடந்த 25 வருடங்களில் எனது தனிப்பட்ட வாழ்க் கையினால் பொதுச் சேவைக்கு பங் கம் ஏற்படவில்லை.

இந்த நிலையில் இளைஞர் ஒரு வரை ஏமாற்றி எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் அடுத்து நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தல் என்ப வற்றிக்கு தயாராகும் வகையில் என்னை அழிக்கும் சூழ்ச்சியில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஈடுபட் டுள்ளது.

இவ்வாறான சூழ்ச்சிகள் மற்றும் சதித்திட்டங்கள் மூலமாக என்னை அமைதியாக்கிவிடலாம் என மகிந்த அரசாங்கம் நினைக்குமாயின் அது தவறான எண்ணமாகும். எந்த விதத்திலும் என்னை அமைதிப்ப டுத்தி விட முடியாது.

அத்துடன் பழைய குற்றவியல் சட் டத்தின் ஏற்பாட்டை பயன்படுத்த முயற்சிப்பதானது பொதுநலவாய அமைப்பின் இணக்கப்பாடுகளை மீறும் செயல்.

இதன் மூலம் பொது நலவாய நாடுகளின் தலைமை பதவியை வகிக்க மகிந்த ராஜபக்ச தகுதியற்றவர் என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது என மங்கள சமரவீர தனது அறிக் கையில் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ஆயிரம் போராளிகளுக்கு சிரியாவில் மரணதண்டனை



(சிரியா)

சிரியாவில் 11 ஆயிரம் போராளிகளை அந்நாட்டு அரசாங்கம் கொடுமைப்படுத்தி மரணதண்டனை நிறைவேற்றியுள்ளது என்று அமெரிக்கா மற்றும் ஐ.நா. அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

சுவிட்சர்லாந்தில் ஜெனீவா II அமைதி பேச்சுவார்த்தை நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது. ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் 40 வருட கால ஆட்சியை முடிவிற்கு கொண்டுவர தேவையான முக்கிய குற்றச்சாட்டாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்கா. ஐ.நா.வின் குற்றச்சாட்டை. நம்பத்தகுந்ததில்லை என்று மறுத்துள்ள சிரியா அரசு. போராளிகளுக்கு நிதி உதவி அளித்து வரும் கட்டார் நாடு தயாரித்துள்ள அறிக்கை இது என்று குற்றம் சாட்டியுள்ளது. (2)

## தலிபான் தளபதி பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடக்கு வஜ்ரிஸ்தான் பகுதியில் இராணுவ வேட்டையின் போது தலிபான் தளபதி அட்னன் ரஷீத் கொல்லப்பட்டார்.

ஆனால் இந்த தகவலை தலிபான்கள் மறுத்துள்ளனர். நேற்று முன்தினம் காலை வடக்கு வஜ்ரிஸ்தான் அமிர் அலி பகுதியில் இராணுவ விமானங்கள், ஹெலிகொப்டர்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 40 தீவிரவாதிகள் பலியானார்கள்.

கடந்த 2004 ஆம் ஆண்டில் முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்திய வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவன். (2)

## உக்ரைனில் போராட்ட தடை சட்டம்



(கீவ்)

உக்ரைனில் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் மேற்கொண்டு வரும் போராட்டம் தொடரும் நிலையில், போராட்டத்தின் அனைத்து வழிமுறைகளையும் தடை செய்யும் சர்ச்சைக்குரிய சட்டங்களை அந்நாட்டு அரசு நேற்று முன்தினம் அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தச் சட்டத்தை மீறுபவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க முடியும். இணையத்தில் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துபவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என இந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. (2)



கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், இஸ்ரேல் மேற்குகரை மற்றும் ஜோரதான் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டார். இந்நிலையில் இஸ்ரேல் ஜனாதிபதி ஷிமோன் பெரசை சந்தித்ததை படத்தில் காணலாம்.





# ஆன்மீகப் பயணம் மேற்கொண்ட யாத்திரிகர்கள் மீது தாக்குதல்

## 28 பேர் பலி; 32 பேர் படுகாயம்

(கராச்சி)

**பாகிஸ்தானில் இருந்து ஆன்மீகப் பயணமாக ஈரானில் உள்ள ஷியா முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலத்திற்கு சென்று திரும்பிய பேருந்துகள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியதில் பயணித்த 28 பேர் உடல் சிதறி பலியாகினர்; 32 பேர் படுகாயமடைந்தனர்.**





இச்சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

பாகிஸ்தானின் வடக்கு பகுதியான பலூசிஸ்தான் மாகாணம் தீவிரவாதிகள் அதிகம் நடமாட்டமுள்ள பகுதியாகும். இப்பகுதி மாஸ்டுங் மாவட்ட ஷியா பிரிவு யாத்திரிகர்கள் ஈரான் நாட்டிலுள்ள ஷியா முஸ்லிம்களின் புனித தலங்களுக்கு சென்று மாலை பேருந்துகளில் திரும்பிக்கொண்டிருந்தனர்.


அவர்கள் வருவதை அறிந்த தீவிரவாதிகள், வீதிகளில் புதைத்துவைக்கப்பட்டிருந்த குண்டுகளை அப்போது வெடிக்கச்செய்தனர். இதில் சிக்கிய ஒரு பேருந்து வெடித்து சிதறியது.

அப்போது பேருந்தில் இருந்த யாத்திரிகர்களில் குறைந்தது 28 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 32 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று கூறப்படுகிறது. இப்பகுதியில் இயங்கும் லஷ்கர் இ ஜாங்பி என்ற சன்னி போராளிகள் இயக்கம் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஜனாதிபதி மாம்னூன் ஹுசைன் மற்றும் பிரதமர் நவாஸ் ஷெரீப் கண்டனம் தெரிவித்துள்ளனர். (2)

## தீவிரவாதிகள் 26 பேரை தூக்கிலிட்ட ஈராக் அரசு



(பக்தாத்)

ஈராக்அரசு தீவிரவாதக் குற்றங்களுக்காக 26 பேரை கடந்த ஞாயிறன்று தூக்கிலிட்டதாக அந்நாட்டின் நீதித்துறை நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

சர்வதேச விமர்சனங்களையும் மீறி ஈராக் இதுபோன்று கும்பலாகத் தண்டனை வழங்குவதை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

தூக்கிலிடப்பட்ட அனைவருமே ஈராக்கிய நாட்டவர்கள் ஆவர். அவர்களுள் பக்தாத்தில் சுஹ்வா போராளிகளின் தலைவராக இருந்த அடேல் அல்-மஷ்ஹதானி என்பவரும் ஒருவராவார்.

இவர்கள் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து ஈராக்கில் நடந்த அல்-கொய்தா கிளர்ச்சியை அடக்க அமெரிக்க படையினருக்கு உதவியவர்கள் ஆவர். மேலும், கடந்த 2006 மற்றும் 2007 ஆம்ஆண்டுகளில் இங்குள்ள சன்னி, ஷியா பிரிவினரிடையே ஏற்பட்ட இரத்தக் கலவரங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பலியாகினர்.

கடந்த வருடங்களில் இத்தகைய வன்முறைகள் இங்கு மீண்டும் அதிகமாகி உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை யின மனித உரிமைகள் தலைவரான நவி பிள்ளை ஈராக்கின் வெகுஜனக் கொலைகளை ஆபாசமான, மனித நேயமற்ற செயல் என்று கண்டனம் செய்வதோடு அந்நாட்டின் நீதி அமைப்பு ஆழ்ந்த குறைபாடுகளைக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். (2)

## பாங்கொக் நகரில் அவசரநிலை பிரகடனம்



(பாங்கொக்)

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நடைபெற்றுவரும் தொடர் போராட்டத்தை கட்டுபடுத்துவதற்காக, அந்நாட்டு அரசு அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது.

தற்போது பிரதமராக உள்ள யிங்லக் ஷினவத்ரா பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சி போராட்டம் நடத்தி வருகிறது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இப் போராட்டம் பாங்கொக்கை முற்றுகையிட்டுள்ளது. இதனால் அங்கு இயங்கும் பிரதமர் அலுவலகம் உட்பட பெரும்பாலான அரசு அலுவலகங்கள் மூடப்பட்டு உள்ளன.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர தலைநகர் பாங்கொக் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இது 60 நாட்கள் அமுலில் இருக்கும். அதற்கான உத்தரவை பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பிறப்பித்துள்ளார்.

பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கபட்டு உள்ளது.

பாங்கொக்கில் செய்தியாளர்கள் மத்தியில உரையாற்றிய தாய்லாந்து துணை பிரதமர் சுராபங் டோவிஷாஷாய்குல் கூறுகையில்,

பாங்கொக்கில் தற்போதைய நிலவரத்தை கவனத்தில் கொண்டு, அவசர நிலை பிரகடனம் செய்ய அமைச்சரவை முடிவு செய்தது.

பாங்கொக் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அவசரநிலை பிரகடனம் அமுலில் இருக்கும். இந்த விவகாரத்தில் இராணுவத்தை ஈடுபடுத்தும் திட்டம் எதுவும் அரசுக்கு கிடையாது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நேரிட்டது போன்று வன்முறை சம்பவங்கள் நடைபெறுவதை அரசு விரும்பவில்லை என்று சுராபங் டோவிஷாஷாய்குல் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமசிவாயவே. -சம்பந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஓம் நமசிவாய என ஒலிக்கும் பிரார்த்தனை வேள்வியில் இணைவோம் வாரீர்

உலகம் என்பது பல் சமயங்களைக் கொண்டது. உலகில் பல் சமயங்கள் இருப்பினும் அவை அனைத்தும் மனித குலத்தை நல்வழிப்படுத்துவதை நோக்காகக் கொண்டவை என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இருந்தும் சமயங்கள் சில மதவெறி கொண்டவையாக இருப்பது வேதனைக்குரியது.

எனினும் ஒவ்வொரு சமயங்களும் அவற்றைப் பின்பற்றுவோரால் எங்ஙனம் முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பதை எங்கள் இலங்கைத் திருநாட்டை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்தால்; பெளத்தம், அரசாட்சியின் மதமாக்கப்பட்டு இந்த நாட்டில் பாதுகாக்கப்படுகின்றது.

கத்தோலிக்க மதமானது திருச்சபை என்ற அமைப்பினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அதன் இருப்பை அகலப்படுத்துகின்றது.

தங்கள் வாழ்வு முழுவதும் மார்க்கம் எனும் அடிப்படையில் ஒரு நாளைக்கு ஐந்து நேரத் தொழுகை என்ற உன்னத்தோடு இஸ்லாம் தன் பலத்தை உறுதிப்படுத்தி உள்ளது.

இந்து சமயமோ எதையும் செய்யமுடியாமல் தன் பெருமை மிகு வரலாற்றை பறிகொடுத்து பறிபோவதும் தெரியாமல் காலம் கழிக்கிறது.

இந்த நிலைமையை நினைக்கும் போது, நம் நெஞ்சம் கனலாகி, பிராணன் வெப்பமாகி வெளியேறுகின்றது.

1959-ம் ஆண்டு இந்த நாட்டின் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவை சோம்ராமதேரர் சுட்டுக் கொல்கிறார்.

தன் மீது துப்பாக்கியால் சுட்டவர் சோமராமதேரர் என்பதை பண்டாரநாயக்க கண்டிருந்தும் மஞ்சள் காவி அணிந்த ஒருவரே தன்னைச் சுட்டதாக மரணத்திற்கு முன் அவர் வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

பெளத்த துறவி ஒருவர் தன்னைச் சுட்டதாகக் கூறினால், அது பெளத்தத்திற்கு இழுக்கு என்பதை மரணிக்கும் வேளையிலும் நினைத்து மஞ்சள் அங்கி அணிந்த ஒருவர் என்று பொதுப்படகூறியதற்குள் பிரதமர் பண்டாரநாயக்கவிடம் இருந்த மதப்பற்று வெளிப்படும்.

கூடவே சோமராமதேரருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது ஒரு தேரருக்கு தூக்குத்தண்டனை விதிக்கலாகாது என்ற பெளத்த மதக் கொள்கையில், தேரரை கத்தோலிக்க மதத்தவராக்கி தூக்குத்தண்டனை விதித்த வரலாறும் இந்த நாட்டில் நடந்துமுடிந்த உண்மை.

இவ்வாறெல்லாம் மதப்பற்றுக்கள் இருக்கையில் இந்துமதத்திற்காக இங்கு இருக்கக் கூடிய பற்றுதல் என்ன என்றால் எதுவுமே இல்லை.

இந்நிலையில், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஓம் நமசிவாய எனும் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சாடனம் செய்யும் மாபெரும் பிரார்த்தனைப் பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"...படைக்கலமாக உன்நாமத்து ஐந்தெழுத்தும்.." என்றுரைக்கும் திருமுறையைச் சாட்சியாகக் கொண்டு சிவபூமி என்ற எங்கள் ஈழத் திருநாட்டில் நமசிவாய எனும் பஞ்சாட்சரத்தை உச்சாடனம் செய்யும் வேள்வி நாளை 24-ம் திகதி நடைபெறுகையில், நாம் எல்லோரும் அதில் பங்கேற்று சிவ நாமத்தை உச்சரிப்போம்.

இச் சிவபூமியில் இந்து சமயம் தன் சனாதன தர்மத்தை நிலைநாட்டி மக்களுக்கு மாறில்லா மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கு அது ஒன்றே போதும். நாம் எல்லோரும் ஒன்று திரள்வோம்.

## நினைவுரையும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அமரர் கந்தையா தர்மலிங்கத்தின் 31ஆம் நாள் நினைவுரையும் அவரின் ஞாபகார்த்தமாக சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய **பகிர்ந்துண்ணல** நூல் வெளியீடும் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத்தில் கரவெட்டி தபால் அதிபர் அ.அருளானந்தசோதி தலைமையில் நடைபெறும்.

நினைவுரைகளை டாக்டர் க. வேலும் மயிலும் , வே.இராசலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

நூல் வெளியீட்டுரையை கவிஞர் கொற்றை பி.கிருஷ்ணானந்தன் ஆற்றுவார். (அ-2)

## மணல் ஏல விற்பனை

(சாவகச்சேரி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் மணல் ஏல விற்பனை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை இவ் ஏல விற்பனை நடைபெறவிருந்த நிலையில் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-29)

## இலங்கைக்கு வழங்குவது ரோந்துக் கப்பல்களே

(கொழும்பு)

இலங்கைக்கு போர்க்கப்பல் அல்ல ரோந்து கப்பல்களையே வழங்கவுள்ளதாக இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சென்னை மேல் நீதிமன்றத்தில் இது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம், சத்திய கடதாசியை சமர்ப்பித்துள்ளது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் சார்பில் வெளியுறவு அமைச்சின் உதவி செயலாளர் ஜோசி இந்த சத்திய கடதாசியை சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன் இந்த கப்பல்கள் வழங்கப்பட்ட பின்னர் அவற்றை இந்திய கடற்பகுதிக்குள் செலுத்துவதில்லை என்று இலங்கை கடற்படையும் உறுதியளித்துள்ளதாக ஜோசி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இந்திய கடற்படையினரும் இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவர் என்று ஜோசி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஈரான் எம்.பி.க்கள் குழு பாராளுமன்றம் வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஈரான் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளனர்.

பாராளுமன்ற சபாநாயகர் கலரிக்கு வருகை தந்த ஈரான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஈரான் - இலங்கை நட்புறவுச் சங்க தலைவர் அடங்கலான ஈரான் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருப்பதாகவும் அவர்களை வரவேற்பதாகவும் குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார் அறிவித்தார்.

இதன்போது [illegible] பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை வரவேற்றனர். (அ-2)

## தாய் நிலத்தில் பற்றற்றவன் தன் தாயிலும் பற்றற்றவனாவான்

### தமிழ்ப்பற்றை வலியுறுத்துகிறார் அரியநேத்திரன்



(கொழும்பு)

தாய் நிலத்தில் எவன் ஒருவன் பற்றில்லாதவனாய் இருக்கின்றானோ, அவன் தன்னுடைய தாயிலும் பற்றில்லாதவனாகத்தான் இருப்பான். மனிதனாகப் பிறந்த எமக்கு ஆறாவது அறிவான பகுத்தறிவு இருக்கின்றது. அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் இவ்வாண்டிற்கான பொதுக்கூட்டமும் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்,

இப்போது எமது விடுதலைப் பயணம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழர்களின் பகுத்தறிவு அத்தியாவசியமானதாகத் தேவைப்படுகின்றது. தமிழர்களாகிய எமக்கு எஞ்சியிருப்பது இரண்டு விடயங்கள் மாத்திரமே. அதில் ஒன்று கல்வி, மற்றையது தேசிய உணர்வு. எவற்றை இழந்தாலும் இவை இரண்டையும் இழக்காமல் இருப்பது மிக அவசியமாகும்.

இந்த இரண்டையும் சரியாக பயன்படுத்துவோமாக இருந்தால் தமிழ் மக்கள் இதுவரைகாலமும் இழந்த உரிமைகளை விரைவாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் தற்போது கிடைக்கும்.

அரசியல்தீர்வை பெற ஒற்றுமை உணர்வுடன் இருந்தால் மாத்திரமே எமது இலக்கில் சரியாக வெற்றிபெற முடியும்.

தற்காலத்தில் கல்வியானது பூலோக மயப்படுத்தப்பட்டதொன்றாக மாறிவிட்டது. இந்தக்காலகட்டத்திலேதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று உலகம் போகும் போக்கைப் பார்த்தால் நாங்கள் ஒழுங்கான கல்வியை ஒழுக்கவிழுமியங்களுடன் கற்றுத்தேற வேண்டும். அப்போதுதான் எதிர்காலச்சவால்களுக்கு முகம்கொடுத்து வாழமுடியும்,


இந்த நாட்டிலே மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட இனமான எமது தமிழ் இனம், இன்றும் தங்களது விடுதலையை வென்றெடுத்து அதன்மூலம் நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுவதற்காக சர்வதேச ரீதியாக ஈடுபட்டுக்கொண்டு வருகின்றது.

இந்தக்காலகட்டத்தில் அபிவிருத்தி எனும் மாயைக்குள் சிக்கி எம்மக்களின் அபிலாசைகளைத் தொலைத்தவர்களாக மாறிவிடாமல் அபிலாசை கிடைக்கும் வரை தமிழர் என்ற உணர்வுடனும், தமிழ்த்தேசியப் பற்றுறுதியுடனும் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும்.

இதற்கான முழுப்பொறுப்புக்களையும் ஒவ்வொரு ஊர்களில் உள்ள பொது அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், பழைய மாணவர்கள் என பலரும் ஒன்றிணைந்து மக்களை நல் வழிப்படுத்தி எதிர்காலத்தில் ஒழுக்கம் நிறைந்தவர்களாக வளர்த்தெடுப்பதற்கு முன்வரவேண்டும்.


தற்போது எமது இனத்தின் கலை கலாசாரங்கள், பாரம்பரியங்கள் மெதுமெதுவாக மறைந்து கொண்டு செல்லும் நிலையினையும் காணமுடிகின்றது. இதனை இப்படியே விட்டுவிட்டால் நாங்கள் எதிர்கால சந்ததியினரை காப்பாற்ற முடியாமல் போய்விடும் நிலை உருவாகிவிடும் என அரியநேத்திரன் தெரிவித்தார். (செ-2)

## சத்திய தரிசனம்



சத்திய சாயி பக்தர்களுக்கான ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள்

- தினசரி தியானம், ஜெபம்
- வாரத்திற்கொரு தடவை குடும்ப பஜனை
- குழந்தைகளை பாலவிகாஷ் வகுப்புக்களில் பங்குபற்ற வைத்தல்
- சாயி இலக்கியங்களை கிரமமாகப் படித்தல்
- சாயி நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்படும் சமூகசேவைகளில் பங்கு கொள்ளல்
- மாதத்திற்கொரு முறையாவது நகர சங்கீர்த்தனங்களில் பங்குபற்றல்
- எல்லோரிடமும் அன்பாகவும் மிருதுவாகவும் பேசுதல்
- பிறரைப்பற்றி குறை கூறுவதை தவிர்த்தல்
- ஆசைக்கு வரம்பு வைத்தல்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வெற்றிலை போடுதல்

வெற்றிலையின் பின்புறம் சுண்ணாம்பு தடவ வேண்டும். காம்பு, நடு, நரம்பு, நுனி ஆகியவற்றைக் கிள்ளி எறிய வேண்டும். காலையில் வெற்றிலை போடும் பொழுது பாக்கு அதிகம் சேர்த்தால் மலம் நன்கு கழியும். நடுப்பகலிற் சுண்ணாம்பு சற்று அதிகம் சேர்த்தால் நல்ல பசி உண்டாகும். மாலையில் வெற்றிலை அதிகம் சேர்த்தால் வாய் துர்நாற்றம் நீங்கும். அதிகநேரம் சுண்ணாம்பு வைத்திருந்த வெற்றிலையை உபயோகித்தால் பீடை வரும்.

கழுவாத வெற்றிலையையும் சீவாத பாக்கையும் சரியாக நீர்க்காத சுண்ணாம்பையும் உபயோகிக்கக்கூடாது. சுண்ணாம்பு தடவிய வெற்றிலை, பாக்கு இவற்றை உட்கொள்ளாமல் வெறும் வெற்றிலையையோ அல்லது வெறும் பாக்கையோ போடக்கூடாது. வெற்றிலையின் பின்புறம்தான் சுண்ணாம்பு தடவ வேண்டும். முன்புறம் சுண்ணாம்பு தடவக்கூடாது.


வெற்றிலையின் நுனியிற் பாவமும் மூலத்தில் வியாதியும் நரம்பிற் புத்திக்குறைவும் உள்ளதால் இவற்றைத் தள்ளிவிட வேண்டும். அதாவது காம்பு, நடு நரம்பு, நுனி ஆகியவற்றைக் கிள்ளி எறிய வேண்டும்.

வெற்றிலையை வெளிப்புறமாக மடிக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து; மானிப்பாய் இந்து, பற்றிக்ஸ் இணைச்சம்பியன்






யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மின்னொளியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் மானிப்பாய் இந்துவும் சென்.பற்றிக்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

போட்டிகளைக் காண பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர்.

மூன்றாமிடத்தை தெரிவு செய்வதற்கான போட்டி முதலில் இடம்பெற்றது.

இதில் யாழ் மத்திய கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பித்து 12 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்திய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வீரன் ரிஷோத் கோலொன்றினைப் போட்டார்.



இதன் மூலம் முதற்பாதி 1:0 என தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முன்னிலை வகிக்க இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் போட முயற்சித்தும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இதன் மூலம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 1:0 என யாழ். மத்திய கல்லூரி அணியை வென்று 3ஆம் இடத்தை வென்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதின. இரு அணிகளும் சம பலம் மிக்கவை என்பதால் போட்டிகள் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

முதற்பாதியின் போது இரு அணிகளும் மாறி மாறி எதிரணி கோல் கம்பங்களை ஆக்கிரமித்த போதும் கோலெதனையும் பெறவில்லை.

இதன் படி முதல் பாதி 0:0 என்ற நிலையில் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியின் 18ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதமாக்கிய மானிப்பாய் இந்து வீரன் அகிலன் கோலொன்றினைப் போட்டார்.

பதிலுக்கு கோல் போடுவதற்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி பல வழிகளில் முயற்சித்தது.

இதன் பலனான 23 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரன் ஜொாட் கோலாக்கினார்.

இதனால் போட்டி 1:1 என்னும் விறுவிறுப்பான நிலைக்கு வந்தது.

தொடர்ந்து கோலெதுவும் பெறப்படாமையால் போட்டி 1:1 என்று நிறைவுக்கு வந்தது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்படவிருக்கையில் இரு அணிகளினதும் ஆதரவாளர்கள் பல தடவைகள் போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்கப்பட்ட போதும் மைதானத்தை விட்டு வெளியேறாமையால் போட்டி விதிமுறைகளுக்கமைவாக போட்டியில் இரு அணிகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா கலந்து கொண்டார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னல்ட், எதிர்வீரசிங்கம் உட்பட்ட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பங்குகொண்ட பாடசாலைகளுக்கு உதைபந்துகளும், காலணிகளும் வழங்கப்பட்டன. (க-23)

## மென்பந்து சுற்றுப்போட்டிகள்

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டிகள் 25, 26, 28 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகம் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077-60 39 726, 077-22 05 169, 077-19 49 169.



கோப்பாய் விக்றி விளையாட்டுக் கழகம் அணிக்கு 7 பேர் கொண்ட 8 ஓவர்கள் மென்பந்து சுற்றுப்போட்டியை கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடத்திவருகிறது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077-46 65 026, 077-37 31 844 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

## கரப்பந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

அல்வாய் மேற்கு சிவநந்தா விளையாட்டுக் கழகம் அணிக்கு 5 பேர் கொண்ட கரப்பந்தாட்ட போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இப் போட்டியானது எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் கரப்பந்தாட்ட கழகங்கள் 077-20 59 952 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (க-24)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பொங்கல் விழா தாச்சிப் போட்டி; தாவடி காளியம்பாள் சம்பியன்

வடமாகாண சபை விளையாட்டுத் திணைக்கள ஆதரவில் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திய பொங்கல் விழாவின் தாச்சி இறுதிப் போட்டி தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 3 மணிக்கு இடம்பெற்றது.

இப் போட்டியில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து உடுவில் வைகரை அணி மோதியது.

சொந்த மைதானத்தில் விளையாடிய தாவடி காளியம்பாள் அணி ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

முதல் அரைப்பாதியில் 3:0 என்னும் பழங்கள் அடிப்படையில் தாவடி காளியம்பாள் அணி முன்னிலையிலிருந்தது.



இரண்டாவது பாதியிலும் தாவடி காளியம்பாள் அணியின் ஆக்ரோஷமான ஆட்டம் தொடர்ந்தது.

பதிலுக்கு உடுவில் வைகரை அணி பழங்களை பெற முயற்சித்த போதும் அம் முயற்சி கைகூடவில்லை.

இரண்டாவது அரைப்பாதியில் தாவடி காளியம்பாள் அணி மேலும் 3 பழங்களை எடுத்து 6:0 என்னும் கணக்கில் உடுவில் வைகரை அணியை வீழ்த்தி வடமாகாண சபை விளையாட்டுத் திணைக்கள ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்திய பொங்கல் விழாவின தாச்சி வெற்றியாளர்களாக தெரிவானார்கள்.





இப் போட்டியின் சிறந்த தாச்சியாக தாவடி காளியம்பாள் அணியின் த.கமலநாதன், சிறந்த விளையாட்டு வீரனாக தாவடி காளியம்பாள் அணியின் ச.ராஜு தெரிவானார்கள்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, வட மாகாண சபை உறுப்பினரும், வட மாகாண விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆர்னல்ட், வடமாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி, வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ராஜாரணசிங்க, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன், வலி. தெற்கு பிரதேச சபை உப தவிசாளர் பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் மைதானத்தில் குழுமியிருந்ததுடன் தாவடி காளியம்பாள் அணி வெற்றி பெற்றதற்கு பிற்பாடு கொளுத்தப்பட்ட வெடிகளால் மைதானமே அதிர்ந்தது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து அணி அபாரம் மீண்டும் சொதப்பும் இந்தியா

## பறிபோனது "நம்பர் 1"

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியிலும் இந்திய அணி தோல்வியைத் தழுவியுள்ளது. இப் போட்டியில் இந்திய அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 15 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதன் காரணமாக சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் இருந்த இந்திய அணி அந்த இடத்தில் இருந்து பின்தள்ளப்பட்டு இரண்டாம் இடத்தை அடைந்தது.

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 05 போட்டிகள கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது போட்டியிலும் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

ஹமில்ரனில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 33.2 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களுடன் காணப்பட்டபோது மழை குறுக்கிட்டது. அதன் பின்னர் போட்டி 42 ஓவர்களாக மாற்றப்பட்டு மீண்டும் ஆரம்பித்தபோது, அவ்வணி 42 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக கேன் வில்லியம்சன் 87 பந்துகளில் 77 ஓட்டங்களையும் றோஸ் ரெய்லர் 56 பந்துகளில் 57 ஓட்டங்களையும் கொரி அன்டர்சன் 17 பந்துகளில் 44 ஓட்டங்களையும் மார்ட்டின் கப்ரில் 65 பந்துகளில் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக மொஹமட் ஷமி 03 விக்கெட்டுக்களையும் புவ்னேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா,ரவீந்திர ஜடேஜா, சுரேஷ் ரெய்னா ஆகியோர தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

டக்வேர்த் லூயிஸ் முறையில் 42 ஓவர்களில் 297 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.3 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களுடன்காணப்பட்டபோது மழை மீண்டும் குறுக்கிட்டது. மீண்டும் டக்வேர்த் லூயிஸ் முறையில் போட்டியின் முடிவு கணிக்கப்பட, இந்திய அணி 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 22 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ் வணி, 02 விக்கெட்டுக்களை இழந்து 37 ஓட்டங்களுடன் தடுமாறியபோதிலும், 3ஆவது விக்கெட்டுக்காக விராட்கோலி, அஜின்கியா ரஹானே இருவரும் 90 ஓட்டங்களையும் 5ஆவது விக்கெட்டுக்காக மகேந்திர சிங்டோனி, சுரேஷ் ரெய்னா இருவரும் 62 ஓட்டங்களையும் பகிர்ந்தனர். ஆனால், அதன் பின்னர் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தன.


துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் கோலி 65 பந்துகளில் 78 ஓட்டங்களையும் மகேந்திரசிங் டோனி 44 பந்துகளில் 56 ஓட்டங்களையும்

அஜின்கியா ரஹானே 42 பந்துகளில் 36 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 22 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 04 விக்கெட்டுக்களையும் கொரி அன்டர்சன் 03 விக்கெட்டுக்களையும் கைல் மில்ஸ், மிற்சல் மக்லநகன் இருவரும தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் தெரிவானார்.

05 போட்டிகள் கொண்ட இத் தொடரில், 02 போட்டிகளின் நிறைவில் நியூஸிலாந்து அணி 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்கிடையான மூன்றாவது ஒருநாள்போட்டி வரும் 25-ம் திகதி ஆக்லாந்தில் ஆரம்பமாகின்றது. (க)



ஆட்ட நாயகன் கேன் விலியம்சன்

## போரின் பின்...

பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இலங்கையில் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்களின் இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் பல கட்டங்களாக இனப்படு கொலைகள் நடந்துள்ளது. போரின் போது இலங்கை இராணுவத்திற்கு இங்கிலாந்து அரசு ஆயுத உதவிகள் செய்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(செ-11)

## தவறு செய்தால்...

கொண்டு பிரதமர் போதைப் பொருளை கொண்டு வருபவர் என்று சத்தமிடுகின்றனர்.

கத்தியால் குத்தினாலும் எனது மனதை அசைக்க முடியாது. தவறு செய்தால் எவரையும் வணங்கி மன்னிப்புக்கோர நான் தயாராக இருக்கின்றேன்.

ஹெரோயின் போதைப் பொருளுக்காக விசேடமான நீதிமன்றத்தில் வைத்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும். இல்லையென்றால் இலங்கை அழிந்து போகும் என்றார். (செ-11)

## இலங்கை...

மையாக அமுல்படுத்தி, வடக்கு மாகாணத்திற்கு காணி அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அரசாங்கத்திற்கு நிபந்தனை முன்வைத்தது.

அத்துடன் வடக்கில் ஏனைய இனமக்களை குடியேற்றுவதை நிறுத்த வேண்டும் எனவும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்க வேண்டும் எனவும் அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது.

இவற்றை நிறைவேற்றினால் ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் யோசனையை தவிர்க்க முடியும் என அமெரிக்கா நிபந்தனை விதிக்கின்றது.

இதன்மூலம் அமெரிக்கா யோசனையை கொண்டு வருவதற்காக நோக்கம் தெளிவாகியுள்ளது. வடக்கில் இராணுவத்தை திரும்பபெறும் சூழலை ஏற்படுத்தவும் 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று பிரிவினைவாதத்தை நோக்கி நாட்டை இட்டுச் செல்லவே அமெரிக்கா இந்த யோசனையை கொண்டு வருகிறது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மட்டுமல்ல, அதற்கும் அப்பால் சென்று பிரிவினைவாத சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்துவது அமெரிக்காவின் நோக்கம்.

அத்துடன் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இனச் சுத்திகரிப்பை மாற்றியமைக்கும் சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்வதும் அமெரிக்காவின் நோக்கமாகும்.

இலங்கையின் வடக்கில்தான் இனச் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. தெற்கில் 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் ஏற்பட்டது. எனினும் அப்போதிருந்ததை விட இன்று அதிகளவான தமிழர்கள் தெற்கில் வாழ்கின்றனர்.

ஆனால் வடக்கில் இருந்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் விரட்டினர். அவர்களை மீளக்குடியேற்ற முடியாதுள்ளது.

வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றுவதை முற்றாக தடுத்து நிறுத்த முழு மேற்குலகமும் முயற்சித்து வருகின்றன. இதனால் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இனச் சுத்திரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு இந்த நாடுகள் கூறுகின்றன.

சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் வடக்கில் குடியேற்ற வேண்டாம் எனக் கூறும் அமெரிக்கா, புலிகளின் இனச் சுத்திகரிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்கின்றது.

இந்த நிலையில், இறுதிக்கட்ட போரில் இலங்கை அரசும், படையினரும் இனப்படுகொலை செய்தனர் என்ற யோசனையை கொண்டு வந்து நாட்டில் தமிழ் இனவாதம் அரசாளும் நிலைமையை ஏற்படுத்தவே அமெரிக்கா முயற்சித்து வருகிறது என்றார் அமைச்சர் விமல். (செ-11)

## விரிவடைந்து...

முதலில் ஏற்கெனவே கண்டு பிடிக்கப்பட்டிருந்த மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டதோடு பரிசோதனைகளுக்காக குறித்த புதைகுழியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் பாகங்கள எடுக்கப்பட்டு 4 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டுள்ளன.

மேலும் குறித்த மனித புதை குழி 1/2 மீற்றருக்கு விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொளளப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணி முதல மாலை 2.30 மணிவரை குறித்த நடவடிக்கைகள் இடம் பெற்றது.

மீண்டும் மனித புதை குழி இன்று வியாழக்கிழமை நீதவான் முன்னிலையில் தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மன்னார் புதைகுழி தொடர்பில் இராணு வம் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டை இலங்கையின் இராணுவ தளபதி நிராகரித்துள்ளார்

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா கமமே இது தொடர்பில் தகவல் தருகையில், புதைகுழி பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் என்ற வகையில் இராணுவத்துக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று குறிப்பிட்டார். (செ-11)

## போர்க்குற்ற...

விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு நபர் தனது மடிக் கணனியை பயன்படுத்தி தகவல்களை வழங்கியுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில தனது சொந்த செயற்பாடுகள் காரணமாகவே தோல்வியை சந்திக்க உள்ளது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக அரசாங்கமே ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவின் முன் வாக்குறுதியளித்தது. எனினும் அதனை நிறைவேற்ற தவறியுள்ளது.

அத்துடன் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேசம் எதிர்பார்க்கும்படியான சுயாதீனமான விசாரணை நடத்தபபடும் என அரசாங்கம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் உறுதியளித்தது. ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடக்கவில்லை.

அரசாங்கம் உறுதிமொழியை நிறைவேற்ற தவறியதால், ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ளது என்றார். (செ-11)

## மேற்குலகம்...

உரிமை ஆணைக் குழுவில் யோசனை ஒன்று நிறைவேற்றப்பட உள்ளது. இதற்கான காரணங்களையும் அது தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடுகளை தெரியப்படுத்த வேண்டியுள்ளது.

1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சோசலிச முகாம்கள் வீழ்ச்சியடைந்தன. அதுவரை உலகம் இரண்டு சக்திகளாக பிரிந்து இருந்தன.

சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச நாடுகள் ஒரு அணியாகவும் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகள் ஒரு அணியாகவும் இருந்து வந்தன. இதனால் உலக நாடுகளின் அரசியலில் மிக முக்கியமான அரசியல் சமநிலை காணப்பட்டது. 1990 ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம் வீழ்ச்சியடைந்த பின்னர் அமெரிக்கா தலைமையிலான தனி முதலாளித்துவ முகாம் உருவானது.

அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார தேவைகளை கருதி அந்நாடு ஏனைய நாடுகள் மீது அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்தது. போர் ஆக்கிரமிப்பாகவும் அதன் அழுத்தங்கள் இருந்தன. அமெரிக்காவுக்கு அரசியல் மற்றும் பொருளாதார வழிமுறைகள் இருக்கின்றன.

கடந்த காலத்தில் நாட்டில் போர் நடைபெற்ற போதும் சமாதான பேச்சுவார்த்தை காலத்திலும் பல்வேறு பாதுகாப்பு உடன்படிக்கைகள் ஊடாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பிளேக் இடையிலான உடன்படிக்கையும் அப்படியான உடன்படிக்கைகளில் ஒன்றுதான். இந்த உடன்படிக்கை மூலமாக எந்த ஒரு போர் நடவடிக்கையின் போதும் அமெரிக்கா இலங்கையின் வான் பரப்பை பயன்படுத்த முடியும்.

இதனால் அமெரிக்காவுடன் சம்பந்தப்பட்ட எந்த போராக இருந்தாலும் அதில் இலங்கையும் பஙகாளி. இப்படியான அரசியல் பாதுகாப்பு , பொருளாதார உடன்படிக்கைகள் மூலம் எமது நாட்டை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் சம்பந்தமாக இலங்கைக்கு எதிராக யோசனை கொண்டு வரப்படுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் அரசியல் தேவையே ஒளிந்துள்ளது.

இதற்கான எமது எதிர்ப்பையும் விமர்சனத்தை முன்வைத்துள்ளோம். சிலர் அமெரிக்காவின் இந்த அரசியல் தேவையை நிறைவேற்றும் வகையில் அமெரிக்காவிற்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை மறைக்க முயற்சித்து வருகின்றனர்.

மேலும் அமெரிக்காவின் தேவை மற்றும் அதற்கான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தும் சூழலை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்தது என அநுர எம்.பி குற்றஞ்சாட்டினார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் சுமத்து...

முறைகளுக்கு தடையாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர்கள் குழு அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் விபரங்கள் 2031-ம் ஆண்டு வரையில் இரகசியமாகப்பேணப்பட உள்ளது.

இதனால் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

2011-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி தாருஸ்மான் தலைமையிலான நிபுணர்கள் குழு இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதன் பின்னர் அமெரிக்காவும் குற்றச்சாட்டுக்களை முன் வைப் போர் பற்றிய தகவல்களை வெளியிடத் தயாரில்லை என அறிவித்துள்ளது.

இவ்வறிவிப்புக்களை கருத்தில் கொண்டு சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்ட மொன்று விரைவில் அறிமுகம் செய் யப்பட உள்ளது. அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பிரித்தானியாவும் அமெரிக்காவும் சொந்த நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள் குறித்து கவனம் செலுத்துவதில்லை.

குற்றச் செயல்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

அதன் பின்னரே சர்வதேச குற்றவியல் நீதிமன்றமோ ஏனைய சர்வதேச அமைப்புக்களோ நேரடியாக தலையீடு செய்ய முடியும் என ஹக்கீம் தெரிவித்துள்ளார். (செ-11)

## மாலைதீவு...

விஜயம் ஒன்றை மேற்கொண்டு மாலைதீவு ஜனாதிபதி நேற்று முன்தினம் காலை கொழும்பை வந்தடைந்தார்.

இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கிடையிலான இச்சந்திப்பின் போது, விளையாட்டு, திறன் அபிவிருத்தி மற்றும் நாடு கடந்த குற்றங்களுக்கு எதிராக போராடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. (செ-11)


2 மணித்தியாலத்தில்

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள். 077 908 6737

**GUNAA BEST PC**
52, Hospital Road, Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

**வேலைவாய்ப்பு** நீங்கள் தயாரா?

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உலகளாவிய ரீதியில் தன் கிளைகளைப் பரப்பி பெருமை பெறும் **U.S.A** நிறுவனம் சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு சாதாரண கல்வித் தகைமையுடன் சாதனை படைக்க

**ஓர் அரிய சந்தர்ப்பம்.**

- தங்குமிடம் இலவசம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- முந்தும் 25 பேருக்கு முதலிடம் வழங்கப்படும்



(5408)
தொடர்புகளுக்கு:- 077 077 1377, 077 190 6728



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாணம்**

**வருடாந்தப் பொதுக் கூட்டம்-2014**

காலம்: 08/02/2014
இடம்: கல்லூரி றொமைன் குக் மண்டபம்.
நேரம்: மு.ப 09.30 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- அமைதி வணக்கம்
- போசகர் உரை
- தலைவர் உரை
- கடந்த பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
- செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
- கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
- புதிய நிர்வாக சபை தெரிவு
- பிரேரணைகள் (இருப்பின்)
- வேறுவிடயம்
- நன்றி நவிலல்
- கல்லூரி கீதம்

**குறிப்பு:**
பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 05/02/2014 மதியம் 12 மணிக்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்ற முகவரியில் சமர்ப்பிக்கவும்

திரு.ந.ஐங்கரன் — செயலாளர்
திரு.ந.இராஜதேவன் — தலைவர்
(சி-6307)



**வெற்றித்தேர்வு பரீட்சைகள் ஆரம்பமாகின்றன**

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு**
2014ஆம் ஆண்டிற்கான வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

**முதலாவது பரீட்சை 26.01.2014 ஞாயிறு**

தரம் 5 விசேட வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக 35 பரீட்சைகள்.
தரம் 4 விசேட வினாப்பத்திரங்கள் 10 உள்ளடங்கலாக 25 பரீட்சைகள்.
ஞாயிற்றுக்கிழமைகளில் பின்வரும் நேரப்படி பரீட்சைகள் நடைபெறும்
காலை 6.00, 8.00, 10.00 மணி மாலை 2.00 மணி, 4.00 மணி
விரும்பிய நேரத்திற்கு பரீட்சைகள் எழுதலாம்.
வினாத்தாள்கள் திருத்தப்பட்டு உடன் புள்ளிகள் வழங்கப்படும்.
அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர்க்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.
சித்தியடையும் மாணவர்களுக்கு விசேட கௌரவிப்பு வைபவம் இடம்பெறும்.
உடன் பதிவுசெய்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**இடம்: சயன்ஸ் அக்கடமி, நல்லூர்**
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக 100m தூரத்தில்)
தொடர்புகளுக்கு: 0775388471, 07731268..



தற்போது யாழ் நகரில்...



BTEC HND in
**BIOMEDICAL SCIENCE**
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747
(C-6300) Macro Ads

Building Careers - Transforming Lives


**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர்
**சுப்பையா பொன்னம்பலம்**



தோற்றம் 26.12.1939 மறைவு 24.12.2013

இணையிலா துணை யவளை
இடப்பெயர்வில் (மீசாலையில்)
இழந்த நாள்முதல்

வாழ்வெனுந் தேரினைத் தனியே
கரமிரண்டால் இழுத்து வந்து
வடக்கு வீதியில் தரித்த போது
சடக்கென ஆண்டவன் அழைத்தானோ
முப்பத்தோராவது நாளின்று ஆனதோ
இமைப் பொழுதும் எம்நெஞ்சில்
நீங்காது உம் நினைவுகள்
என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்



'பொன் இரத்தின மஹால்'
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்

- குடும்பத்தினர்

(4696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.